வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 04.02.2022 வெள்ளிக்கிழமை | இதழ் : 61 | பக்கங்கள் : 16




# ‘இலங்கை சுதந்திர நாள் தமிழ் தேசத்தின் கரிநாள்’ முள்ளிவாய்க்காலில் இன்று மாபெரும் போராட்டம்!

முல்லைத்தீவு, பெப். 04

இலங்கையின் சுதந்திர நாள் தமிழ் தேசத்தின் கரிநாள் எனும் தொனிப் பொருளில் இன்று வெள்ளிக்கிழமை முள்ளிவாய்க்காலில் முன்னெடுக்கப் படவுள்ள மாபெரும் போராட்டத் துக்கு பொது அமைப்புகளால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு வலிந்து காணா மல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர் கள் மற்றும் வடக்கு - கிழக்கு சிவில் சமூக அமைப்புக்கள், பாதிக்கப்பட்ட தரப்பினர் அனைவரும் ஒன்றிணைந்து இந்த போராட்டத்தை முன்னெடுக்க வுள்ளனர். இந்த போராட்டத்தில் அனைவரை யும் பங்குகொள்ளுமாறு முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அழைப்பு விடுக்கப்பட்டுள் ளது.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட பொத்துவில் தொடக் கம் பொலிகண்டி வரை மக்கள் பேரேழுச்சி இயக்க இணைப்பாளரும் சிவகுரு ஆதீன முதல்வருமான தவத்திரு வேலன்சுவாமிகள், வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட் டவர்களின் உறவினர்களின் சங்க

15

## பயங்கரவாத சட்டத்தை முழுமையாக நீக்குங்கள்!

### கையெழுத்துப் போராட்டம் தொடங்கியது கூட்டமைப்பு

முல்லைத்தீவு, பெப். 04

இலங்கையில் பயங்கர வாத தடைச் சட்டத்தை முற்றாக நீக்க கோரி பொதுமக்கள் கையெழுத் துப் போராட்டம் ஒன்றை முல்லைத்தீவில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பி னர் எம். ஏ. சுமந்திரன் நேற்று முல்லைத்தீவில் தொடக்கி வைத்துள்ளார்.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் பாராளு மன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் இன்று ஊடக சந்திப்பு ஒன்றை நடத்தி னார்

இதன்போது பாராளு மன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், முன்னாள் வடமாகாணசபை உறுப் பினர் து. ரவிகரன், இலங்கை தமிழரசு கட்சியின் இளை ஞர் அணித் தலை

15

# 12 வருடம் கடந்தும் இலங்கை அரசு பொறுப்பு கூற முன்வரவேயில்லை!

## ஐ. நா. செயலருக்கு கொடுத்த உறுதிமொழியும் வீண்!! 47 நாடுகளின் தூதுவர்களுக்கு சம்பந்தன் எம்.பி. கடிதம்

கொழும்பு, பெப். 04

“சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமை சட்டமீறல் கள் தொடர்பிலான பொறுப்புக்கூறல் நடைமுறையை செயல் படுத்துவதாக போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு ஒரு வாரத் துக்குள் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட ஐ. நா. செயலாளர் நாயகத்திடம் இலங்கை அரசாங்கம் வாக்குறுதியளித்தது. எனி னும், 12 வருடங்கள் கடந்தும் இன்று வரை அந்த வாக்கு றுதி நிறைவேற்றப்படவில்லை.”

15



## மீனவர்கள் இன்று கடலில் கறுப்புகொடி போராட்டம்

பருத்தித்துறை, பெப். 04

பருத்தித்துறை சுப்பர்மடம் மீனவர் களின் போராட்டத்துக்கு நீதிமன்றம் தடை விதித்த நிலையில் இன்றைய தினம் அவர்கள் கறுப்புக் கொடி போராட் டத்தை நடத்த முடிவு செய்துள்ளனர்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல் களை எதிர்த்து வடமராட்சி மீனவர்கள் கடந்த நான்கு நாட்களாகப் போராடி வந்த நிலையில் அவர்களின் போராட் டத்துக்கு நேற்று பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் தடை விதித்து.

இதையடுத்து போராட்ட

15

# மீனவர்கள் போராட்டத்துக்கு தடை விதித்தது நீதிமன்றம்!

## போராட்ட களத்தில் பரபரப்பு! விசேட அதிரடி படை குவிப்பு!!

பருத்தித்துறை, பெப். 04

பருத்தித்துறை சுப்பர் மடத்தில் மீனவர்கள் நடத்தி வரும் போராட்டத்துக்கு பருத்தித்தித்துறை நீதி வான் நீதிமன்றம் நேற்று தடை விதித்தது.

இந்தப் போராட்டத் தால் மாணவர்களின் கல் விக்கு இடையூறு, போக்கு வரத்துக்கு தடை என்ப வற்றை சுட்டிக்காட்டி பொது மக்களுக்கு தொந் தரவு என பருத்தித்துறை பொலிஸார் செய்த விண் ணப்பத்துக்கு அமையவே இந்தத் தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கண்டித்தும், இரு இந்திய மீனவர்

15

## அமைச்சரின் வாய்மூல உறுதியை ஏற்க மறுத்த மீனவர்கள்!

பருத்தித்துறை, பெப். 04

பருத்தித்துறையில் போராடிவருபவர் களுடன் பேச்சு நடத்தச் சென்ற அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா ஒரு கட்டத்தில் ஆவேசமடைந்து பேசினார். இதையடுத்து மீனவர்கள் மத்தியில் குழப்பம் ஏற்படவே அவர் அங்கிருந்து வெளியேறினார்.

இவ்வாறு வெளியேறிய அமைச்சரை அவரின் மெய்பாதுகாவலர்கள் பாதுகாப்பளித்து வெளியேற்றியபோது பின்தொடர்ந்து சென்ற மீனவர் கள் அவரை அங்கிருந்து செல்லு மாறு குரல் எழுப்பியிருந்தனர்.

15



## யாழ். கரையோர பகுதிகள் நேற்று முற்றாக முடங்கின!

யாழ்ப்பாணம், பெப். 04

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கண்டித்து யாழ்ப்பாண குடாநாட்டின் கரையோரப் பிரதேசங்கள் நேற்று முற்றாக முடங்கின. இந்தப் போராட்டத்துக்கு முல்லைத்தீவு மீனவர்களும் ஆதரவு வழங்கினர்.

இந்திய மீனவர்களின் அத்துமீறலால் வடம ராட்சி கடல் பரப்பில் இரு மீனவர்கள் உயிரிழந்த

15

## சுதந்திரம் இல்லை என வெளிப்படுத்த அதிகாலை குருந்தூர்மலை செல்வோம்

### முல்லைத்தீவில் சுமந்திரன் அழைப்பு

முல்லைத்தீவு, பெப். 04

“நாங்கள் சுதந்திரம் இல்லாத நாட்டிலே வாழ்கின் றோம் என்பதை பெப்ரவரி 4 ஆம் திகதி (இன்று) உலகத் துக்கு எடுத்துக்காட்டும் ஒரு நடவடிக்கை யாக குருந் தூர்மலைக்கு அதிகாலை செல்வோம்”,என்று அழைப்பு விடுத்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாரா ளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன்.

குருந்தூர்மலைக்கு செல்வதற்கு தடை யேதும் இல்லை என உச்ச நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விடயங் கள் குறித்து பரிசீலிக்க குருந்தூர்மலை செல்ல வுள்ளோம். தடுத்தால் அதனை நாம் எதிர்கொள்வோம் - என்றும் அவர் இதன்போது கூறினார்.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்று அவர் நடத்திய சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும், தெரிவிக்கையில், “இலங்கை சுதந்திரம் அடைந்ததாக சொல் லப்படு

15

## பயங்கரவாத தடை சட்டம்: திருத்தம் செய்வதற்கு பதில் ரத்து செய்யப்படவேண்டும்!

### சர்வதேச நீதிபதிகள் ஆணைக்குழு

நியூயோர்க், பெப். 04

“இலங்கை அரசாங் கம், பயங்கரவாத தடை சட்டத்தில் மேற்கொண்ட திருத்தங்கள் போதுமான தாக இல்லை. கொடூரமான இந்த பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ரத்துச் செய்ய வேண்டும்”, என்று சர்வதேச நீதிபதிகள் ஆணைக்குழு தெரிவித் துள்ளது.

1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கர வாதத் தடை (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தில் திருத்தங்களை செய்த வர்த்தமானியை கடந்த ஜனவரி 27ஆம் திகதி அரசாங்கம் வெளியிட் டது. ஐ. நா. மனித உரிமைகள் ஆணை யாளர் அலுவலகத் தின் அறிக்கைக்கு

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

நண்பர் ஒருவர் லண்டனிலிருந்து தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டார், யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவருகின்ற ...நாடு என்ற பத்திரிகையை பார்த்தீரோ என்று.

இல்லையே அப்படியொரு பத்திரிகை வெளிவருகின்றதா என்று அவரிடமே திருப்பிக் கேட்டேன்.

அவர் ‘வட்ஸ்அப்பில்’ அனுப்பியிருக்கிறேன் பாரும் என்று கூறிவிட்டு, “உங்கள் பத்திரிகை அவர்களை பலமாகத்தான் பாதித்திருக்கிறதுபோல” என்று கூறிவிட்டு லைனைக் கட் பண்ணிவிட்டார்.

பதின்மூன்றை இடைக்காலத் தீர்வாக விடுதலைப் புலிகள் ஏற்றனர் என்ற செய்தியை ஈழநாடு சில நாட்களுக்கு முன்னர் வெளியிட்டிருந்தது.

அந்தச் செய்தியை வைத்து உருவாக்கப்பட்ட சிறி குறிப்பு ஒன்று ‘ஈழநாடு’க்கு வேறு ஒரு பெயரைச் சூட்டியிருந்ததுடன், “இத்தால் சகலரும் அறியவேண்டியது யாதெனில், இந்திய வால்பிடிகள் எந்தப் பொய்யும் சொல்லத் தயங்கார்”, என்று கண்டித்திருந்தது.

இந்த குறிப்பு அந்தச் செய்தி வெளிவந்த மறுநாள் சமூக வலைத்தளங்களில் பரவலாக ஓடித்திரிந்தது.

விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் பாரியார் அடேல் பாலசிங்கம் எழுதிய நூல் ஒன்றை மேற்கோள்காட்டி, பிரான்ஸில் இயங்கும் மனித உரிமைகள் செயல்பாட்டாளர் ச. வி. கிருபாகரன் தெரிவித்திருந்த கருத்து ஒன்றையே ஈழநாடு செய்தியாக்கியிருந்தது.

அடேல் பாலசிங்கம் எழுதிய அந்த ஆங்கில நூல் தமிழில் ‘சுதந்திர வேட்கை’ என்ற பெயரில் வெளிவந்திருந்தது.

பிரேமதாஸவுடன் பேச்சு நடத்திக்கொண்டிருந்த காலம் தொடர்பாக அவர் அந்த நூலில் விபரித்தபோது, மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து புலிகள் யோசித்துக் கொண்டிருந்தமை பற்றி விபரித்திருந்தார்.

அதில், மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவது புலிகளின் தனிநாட்டுக் கோரிக்கைக்கு பாதகமாக அமையாதா என்ற தனது சந்தேகத்தை அன்ரன் பாலசிங்கத்திடம் தான் கேட்டதாகவும், அதற்கு அவர், ‘நிரந்தர தீர்வு ஒன்றுக்கு, மாகாண சபை முறைமை ஒரு சரியான அடிப்படை அல்ல. நாங்கள் சிங்கள மக்களுடன் சமாதானத்தையும் இணக்கமான சகவாழ்வையும் விரும்புகின்றோம். அதனால், விடுதலைப் புலிகள் இயக்கமானது, மாகாணசபைத் தேர்தலை ஓர் இடைக்கால ஏற்பாடாக மாத்திரம் எதிர்கொள்வதற்குத் தீர்மானித்திருக்கின்றதே அல்லாமல், அதனை ஒரு நிரந்தரத் தீர்வாக அல்ல’ என்று விளக்கமளித்திருந்ததாகவும் அடேல் நூலில் விபரித்திருந்தார்.

அதனையே ஈழநாடு செய்தியாக்கியிருந்தது. இந்தச் செய்தியை இந்திய வால்பிடிகளின் பொய் என்று சொல்ல முன்வருபவர்கள், யாரை நோக்கி இந்த குற்றச்சாட்டை முன்வைக்கின்றார்கள் என்பது தெரியவில்லை. இந்த தகவலை தனது நூலில் பதிவுசெய்த அடேல் அம்மையாரை நோக்கியா? அல்லது, அதனை பொதுவெளியில் தெரிவித்த கிருபாகரனை நோக்கியா? அல்லது, அதனை வெளியிட்ட ‘ஈழநாடு’வை நோக்கியா?

ஒற்றையாட்சிக்குள் ஒரு தீர்வை ஏற்றுக்கொண்டுவிட்டால், பின்னர் நாம் கூட்டாட்சிக்கான கோரிக்கையை விடுக்கமுடியாது என்று சிலர் திரும்பத்திரும்பக் கூறிக்கொண்டிருக்கின்ற நிலையிலேயே, புலிகள்கூட இடைக்கால தீர்வாக அதனை ஏற்றுக்கொள்ள இருந்தனர் என்ற செய்தியைச் சொல்லவேண்டும் என்பதற்காகவே இந்த செய்திக்கு ஈழநாடு முக்கியத்துவம் கொடுத்தது என்பதை அதன் வாசகர்கள் புரிந்துகொண்டிருப்பார்கள்.

பதின்மூன்று, என்பது தமிழர்களின் அபிலாசைகளை தீர்த்து வைக்கும் என்று இன்றுவரை எந்த ஒரு தமிழ்த் தரப்புமே ஏற்றுக்கொண்டதில்லை. அதிகம் ஏன், டக்ளஸ்கூட அப்படி ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆனால், பதின்மூன்றில் இருக்கும் எந்த ஓர் அனுகூலத்தையும் துளிகூட பயன்படுத்தாத, அதன் மூலம் கிடைக்கக் கூடியவற்றை தமிழ் மக்களுக்கு பெற்றுக்கொடுக்காதவர்கள் எமது அரசியல் தரப்புக்கள். அதில் ஒன்றுமில்லை என்று சொல்வதற்கான எவ்வித தார்மீக உரிமையும் அற்றவர்கள் இவர்கள்.

அரசியலமைப்பு சட்டத்தை மீறி, மைத்திரிபால தனது ஆட்சிக் காலத்தில் மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கிய போது பொங்கி எழுந்த நாம், அரசியலமைப்பு சட்டத்தை ஒரு ஜனாதிபதி மீறுவதற்கு அனுமதித்தால் அது தவறான முன்உதாரணமாகிவிடும் என்று துள்ளிக்குதித்த நாம், அரசியமைப்பு சடத்தில் இருக்கும் பதின்மூன்றை நடைமுறைப்படுத்தாததை ஏன் அரசியலமைப்பு சட்டமீறலாக கேள்விக் குட்படுத்தி இருக்கமுடியாது?

அதனை செய்யவேண்டும் என்பதையே திரும்பத் திரும்ப கூறிவருகின்றோம்.

- ஊர்க்குருவி

# உயிர்ப் பிரச்னையாக மாறிய வடக்கு மீனவர்கள் விவகாரம்

## அங்கஜன் எம்.பி. கூறுகிறார்

வடமராட்சி , பெப்.4

எமது பிரதேச மீனவர்களின் வாழ்வாதாரம் மாத்திரமே இதுவரை அழிக்கப்பட்டது. ஆனால் தற்போது அது உயிர்ப் பிரச்னையாக மாறிவிட்டது என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை தென்மராட்சி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது பிரதேச கடற்தொழிலாளர்கள் மிகப்பெரிய வேதனையில் இருந்து வருகின்றனர். அவர்களுடைய வாழ்வாதாரம் மிகப்பெரிய அளவில் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அவர்களுடைய வருமானம் அழிக்கப்படுகிறது. அதனையும் தாண்டி உயிருக்கு அச்சுறுத்தலான நிலைமை ஏற்பட்டுள்ளது.இது ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாக உள்ளது. எனியும் நடவடிக்கை எடுக்கிறோம்,எடுக்கிறோம் என்று கூறி காலத்தை கடத்த முடியாது. வாழ்வாதாரப் பிரச்னையையும் தாண்டி உயிர் பிரச்னையாக மாறி விட்டது. இங்குள்ளவர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்றால் அரசாங்கம் அதற்கு பொறுப்புக் கூற வேண்டும். அந்த அடிப்படையில் கடற்தொழில் அமைச்சர் இவ் விடயம் தொடர்பாக ஜனாதிபதியிடம் கூறி மக்களுடைய நம்பிக்கையையும்,எனது நம்பிக்கையையும் நிறைவேற்றி இந்தப் பிரச்னையை தீர்த்து வைப்பார் என்று நான் நம்புகிறேன். அதேசமயம் மாவட்ட அபிவிருத்திக் குழுத்தலைவர் என்ற ரீதியில் நானும் இவ் விடயத்தை ஜனாதிபதியிடம் எடுத்துச் செல்லவுள்ளேன். அண்மையில் யாழ். வந்த வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸிடமும் இது தொடர்பாக முழுமையாக எடுத்துரைத்திருந்தேன். ஒரு புரிந்துணர்வு ஊடாகவே இந்த அச்சுறுத்தல் நிலைமையை மாற்றவேண்டும் என்றும் அந்த நிரந்தர தீர்வுக்கான முயற்சியை விரைவில் எடுப்பேன் என்றும் என்னிடம் உறுதியளித்திருந்தார். இந்த வாழ்வாதார மற்றும் உயிர் பிரச்னைக்கு நிரந்தர தீர்வு கிடைத்தால் மட்டுமே எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க முடியும்-என்றார். (அ-02)

## பரசிட்டமோல் தட்டுப்பாட்டுக்கு விரைவில் தீர்வு!

கொழும்பு, பெப். 04

நாட்டில் நிலவும் பரசிட்டமோல் மருந்துக்கான தட்டுப்பாட்டுக்கான தீர்வு எதிர்வரும் வாரங்களில் வழங்கப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. சுகாதார அமைச்சின் பேச் சாளர் ஒருவர் இதனை தெரிவித்தார்.

நாட்டில் உள்ள மருந்தகங்களில் பரசிட்டமோல் வகை மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகக் கடந்த நாட்களில் தகவல் வெளியாகியிருந்தது.

இந்த நிலையில் இது தொடர்பில் கருத்துரைத்த சுகாதார அமைச்சின் பேச்சாளர் ஒருவர், தற்போது கையிருப்பில் உள்ள மருந்தினை கொண்டு தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

## 197 கைதிகளுக்கு மன்னிப்பு!

கொழும்பு, பெப். 04

இலங்கையின் 74 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு 197 சிறைக்கைதிகள் ஜனாதிபதி பொதுமன்னிப்பின் கீழ் நாளைய தினம் விடுதலை செய்யப்படவுள்ளனர் என சிறைச்சாலைகள் ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார். (அ)

## சம்பிக்கவின் ஆட்சேபனை நிராகரிப்பு!

கொழும்பு, பெப். 04

முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவுக்கு எதிரான குற்றப்பத்திரிகையை எதிர்வரும் ஜூன் மாதம் 17ஆம் திகதி வாசிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நாமல் பலாலே உத்தரவிட்டுள்ளார்.

வழக்கை தொடர முடியாது என்ற பிரதிவாதியின் ஆரம்ப ஆட்சேபனையை நிராகரித்த நீதிபதி, குற்றப்பத்திரிகையை படித்துவிட்டு விசாரணைக்கு திகதியை நிர்ணயிப்பதாக கூறினார்.

2016ஆம் ஆண்டு இராஜகிரியவில் சதீப் சந்தீப என்ற இளைஞரை விபத்துக்குள்ளாக்கிவிட்டு தப்பிச் சென்றார் என பாட்டலி சம்பிக்க ரணவக்கவுக்கு எதிராக சட்டமா அதிபர் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். (அ)

## உயர்தரப் பரீட்சையை நிறுத்த கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு நிராகரிப்பு

கொழும்பு, பெப். 04

பெப்ரவரி 7ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த க.பொ.த உயர்தரப் பரீட்சையை இடைநிறுத்துமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது.

மனுவில் கோரப்பட்ட நிவாரணத்தை வழங்க மேன் முறையீட்டு நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லையென மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சோபித ராஜகருணா தெரிவித்தார்.

## சுற்றுலாத்துறையை மேம்படுத்த 6 ஆயிரம் இடங்கள் அடையாளம்

கொழும்பு, பெப். 04

நாட்டின் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் வகையில் 6 ஆயிரம் இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

மேலும், அடையாளம் காணப்பட்ட இடங்களை அபிவிருத்தி செய்வதற்கான முன்மொழிவுகள் மாவட்ட குழுக்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தரும்போது சுற்றுலாத் தலங்கள் குறித்து அறிந்துகொள்ளும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

## ‘ஒரு இலட்சம் பணிகள்’ திட்டம் வவுனியாவிலும்

வவுனியா, பெப். 04

வரவு செலவுத்திட்டத்தின் மூலம் “ஒரு இலட்சம் பணிகள்” எனும் வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியில் நேற்று வியாழக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அந்தவகையில் வவுனியா காத்தார் சின்னக்குளம் பகுதியிலும் இந்த நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

சமுர்த்தி பயனாளிகளுக்கான வாழ்வாதாரத் திட்டத்துக்கான உறுதிக்கடிதம் வழங்கப்பட்டதுடன், 2 மில்லியன் ரூபாய் பெறுமதியான கிராம சேவகர் அலுவலக கட்டடத்துக்கான அடிக்கல்லும் இதன் போது நாட்டப்பட்டது.

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான குலசிங்கம் திலீபன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் எ.சரத் சந்திர, பிரதேச செயலாளர் நா.கமலதாசன், பொதுமக்கள், உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (அ)

ஈழநாடு
Eelanadu
04.02.2021 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், தை 22

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# அரண்டவன் கண்களுக்கு?

ஆறு தமிழ் கட்சிகள் இணைந்து இந்திய பிரதமருக்கு அனுப்பிய கடிதத்தை எதிர்ப்பவர்கள் ஒரு கதையை சொல்லிவருகின்றனர். அதாவது, சீனாவின் ஆதிக்கத்தின் பிடியிலிருக்கும் இலங்கையை, இந்தியாவின் காலடியில் விழச் செய்வதற்கான ஒரு முயற்சியையே தமிழ் கட்சிகள் செய்கின்றன என்பதே அவர்களின் கண்டுபிடிப்பு. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் இவ்வாறான அபிப்பிராயத்தை வெளியிட்டிருந்தார். தமிழ் சிவில் சமூகம் என்ற பெயரில் வெளியிட்ட அறிக்கையிலும் இதே கருத்து பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

அதாவது, இலங்கையை சீனாவின் ஆதிக்கத்திலிருந்து அகற்றி மீள இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் வழியே தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்த இந்தியா விரும்புகின்றது. அதற்காக தமிழ் மக்களையும் அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளையும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை அரசியலமைப்புடன் பிணைக்கும், 13ஆவது திருத்தச்சட்டத்தை உயர்த்திப் பிடிக்குமாறு இந்தியா அழுத்தம் கொடுக்கின்றது. அரசியல்வாதிகள் இவ்வாறான பிரசாரங்களை முன்வைப்பதை நாம் விளங்கிக் கொள்ளலாம். ஆனால், சமூகத்தின் முன்னேறிய பிரிவாக நோக்கப்படும் சிவில் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்துபவர்களும் இவ்வாறான கற்பனைகளின் வழியாக சிந்திப்பது ஆரோக்கியமான ஒன்றல்ல.

உலக அதிகார நிலையில் சீனா ஓர் இரண்டாம் நிலை சக்தி. சீனா, அதன் செல்வாக்கை இந்துசமுத்திர பிராந்தியத்திலும் விஸ்தரிக்க முற்படுகின்றது. இந்த பின்னணியில்தான் இந்தியாவின் அயல் நாடுகளுக்குள்ளும் சீனா காலூன்ற முயற்சிக்கின்றது. இலங்கையை பொறுத்தவரையில் சீனா கணிசமான செல்வாக்கை பெற்றிருக்கும் ஒரு நாடு என்பதில் முரண்பட ஒன்றுமில்லை.

இலங்கையின் இறுதி யுத்தத்தின்போது, இந்தியாவும் அமெரிக்காவும் ஆயுத உதவிகளை வழங்க மறுத்துவிட்டன. தமிழ்நாட்டின்மீதான கரிசனைகளால், இந்தியாவால் ஒரு கட்டத்திற்கு மேல் இலங்கைக்கு உதவி செய்ய முடியவில்லை. மனித உரிமைகள் சார்ந்த காரணங்களை முன்வைத்து அமெரிக்காவும் இலங்கைக்கு உதவி செய்ய மறுத்துவிட்டது.

இந்த இடத்தை சீனா பயன்படுத்திக் கொண்டது. இதன் மூலம் கிடைத்த வாய்ப்புக்களை, இலங்கைக்குள் காலூன்றுவதற்கான வாய்ப்பாக சீனா பயன்படுத்திக் கொண்டது. அப்போதிருந்த மஹிந்த ராஜபக்ஷ சீனாவின் விருப்பங்களுக்கு இடமளித்தார். மஹிந்த அடிப்படையிலேயே ஒரு மேற்குலக எதிர்ப்பாளர். இதனால், சீனாவின் செல்வாக்கு வேகமாக அதிகரித்தது. இலங்கையில் தனக்கு எதிர்நிலையிலுள்ள நாடு ஒன்று காலூன்றுவது தொடர்பில் இந்தியா நிச்சயமாக கரிசனை கொள்ளும். சீனாவின் உள்நுழைவு தொடர்பான கரிசனை மறுவளமாக ஈழத் தமிழர் அரசியலில், கூடுதல் கவனம் பெறுவதற்கு வழிவகுக்கும் என்னும் அபிப்பிராயம் ஒன்று தமிழ் அரசியல் பரப்பில் எட்டிப்பார்த்தது. இவ்வாறு சிந்திப்பதில் தவறில்லை ஆனால், அனைத்தையும் அதன் வழியாக மட்டுமே - நோக்குவதுதான் தவறானது. இந்தியா கையறு நிலையிலிருப்பதாகவும், ஈழத் தமிழர்களின் அரசியலை விட்டால் இந்தியாவுக்கு வேறு வழியில்லை என்றவாறான பிரசாரங்கள் தமிழ்ச் சூழலில் செய்யப்படுகின்றன. ‘அரண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய்’ என்பதுபோல், எடுத்தற்கெல்லாம் சீனாவை உச்சரித்துக் கொள்ளும் ஒரு நோய் தமிழ் தேசிய அரசியல் பரப்பில் உருவாகியிருக்கின்றது.

முதலில் ஒரு விடயத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அதாவது, இந்தியா ஒரு பிராந்திய சக்தி. சீனா எழுச்சியடைந்துவரும் ஓர் உலக சக்தி. சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் நூற்றாண்டுகால முரண்பாடுகள் உண்டு. சீன - இந்திய எல்லைப்புறங்களில் இருவரின் படைகளும் எந்நேரமும் தயார் நிலையிலிருக்கின்றன. எல்லைகள் தாண்டும் பிரச்னையில் அவ்வப்போது இரண்டு படைகளுக்கும் இடையில் சண்டைகளும் இடம்பெற்றிருக்கின்றன. அவர்களின் பிரச்னைகளை எவ்வாறு கையாளுவது என்பது அவர்களுக்கு தெரியும். ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்களை தவிர வேறு எதுவுமில்லாத நாம், பலம் பொருந்திய நாடுகளுக்கிடையிலான பலப்பரீட்சை தொடர்பில் கற்பனைகளை வளர்த்துக் கொள்வது நகைப்பிற்கிடமானது. பலப்பரீட்சை நிச்சயம் இடம்பெறும். உளவு யுத்தங்கள் இடம்பெறும். இதனை எவராலும் தடுக்க முடியாது. இதுபற்றி ஈழத் தமிழர்கள் அதிகம் அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை. இந்தச் சூழலை தமிழ் மக்களின் நலன்களிருந்து எவ்வாறு பயன்படுத்துவது? நம்மால் பயன்படுத்த முடியுமா? இந்த அடிப்படையில் மட்டும் தான் தமிழ் தேசிய தரப்புக்கள் சிந்திக்க வேண்டும். தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் தங்களையும் ஏமாற்றி, தங்களை நம்பி வாக்களிக்கும் மக்களையும் ஏமாற்றக்கூடாது.

# தரையில் மட்டுமல்ல, கடலிலும் தமது உரிமைகளை இழக்கும் நிலை!

**அலசுவது இராஜதந்திரி**

இலங்கையில் வடக்கு - கிழக்கு மக்களின் பூர்வீக நிலப்பிரதேசங்கள் நாளுக்கு நாள் பறி போகின்ற நிலையிலிருக்கும்போது வடக்கே இலங்கையின் கடல்நீர் பரப்புக்குள் இந்திய மீனவர்கள் அத்துமீறுகின்ற நிகழ்வுகளும் வடபகுதி மீனவர்களின் உரிமைகளை கடலிலும் இழக்கச் செய்வதாகவே இருக்கின்றது.

இலங்கை தனது 74ஆவது சுதந்திர தினத்தை இன்று கொண்டாடுகின்றது. இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் வடக்கு - கிழக்கின் தமிழ் பேசும் மக்கள் தமது தனித்துவங்களை பேணமுடியாத நிலையே காணப்படுகின்றது.

இலங்கையின் சுதந்திரத்துக்காக குரல் கொடுத்து தமது ஆளுமையை நிலைநாட்டிய தமிழ் தலைவர்களையே கொச்சைப் படுத்துமளவிற்கு இலங்கையில் வடக்கு - கிழக்கு தமிழர்கள் கடந்த 74 வருடகாலமாக பூரணத்துவமான சுதந்திரத்தை அனுபவிக்க முடியாதவர்களாகவே இருந்து வருகின்றனர்.

இலங்கையின் வடக்கு - கிழக்கு பிரதேசங்கள் இலங்கை சுதந்திரமடைந்த காலகட்டத்தில் ஒரு பூரணத்துவமான தமிழ் பிரதேசங்களாகவே இருந்தன. இதன்காரணமாகவே இணைந்த வடக்கு - கிழக்கு பிரதேசங்களுக்கு சமஷ்டி அடிப்படையிலான ஒரு தீர்வுத் திட்டத்தை தமிழர்களுக்கு வழங்கவும் சிங்களத் தலைவர்கள் முன்வந்திருந்தனர்.

இருந்தபோதிலும் அன்றைய ‘மேட்டுக்குடி’ தமிழர்கள் சிலரின் சுயநலம் காரணமாகவே சமஷ்டி முறையிலான தீர்வுத்திட்டம் கூட கைகூடாது போயிருந்தது.

இதனையடுத்து படிப்படியாக தமிழர்களின் பூர்வீக நிலங்களின் அபகரிப்பு வடக்கு - கிழக்கில் படிப்படியாக ஆரம்பித்து தற்போது வடக்கே முல்லைத்தீவை அண்டிய பிரதேசம் முதல் திருகோணமலை உள்ளடங்கலாக அம்பாறை வரை அத்துமீறிய குடியேற்றங்கள் இடம்பெற்று வருவதையே அவதானிக்க முடிகின்றது.

நேற்று முன்தினம்கூட குருந்தூர் குமுழமுனை அடிவாரத்திலுள்ள தமது வயல் காணிகளில் நெற் செய்கை பண்ணுவதற்கு அங்குவந்த பௌத்த பிக்குமார்கள் சிலர் அடாவடியாக தடைவிதித்துள்ளனர். அத்துடன், தமிழர்களின் பாரம்பரிய பூர்வீக நிலங்களான கொக்கிளாய், நாயாறு போன்றவைகூட அத்துமீறிய குடியேற்றங்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமையையே அவதானிக்க முடிகின்றது.

இதுதவிர, திருகோணமலையை அண்டிய தமிழர்களின் பாரம்பரிய நிலங்களாக இருந்த பிரதேசங்கள் பலவும் தற்போது அத்துமீறியவர்களால் கையகப்படுத்தப்பட்டுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

இலங்கை சுதந்திரமடைநத காலகட்டத்தில் வடக்கு - கிழக்கின் தமிழர்கள் தமது கல்வி, தொழில் முயற்சி என்பவற்றின் மூலம் முன்னேற்றங்களை கண்டிருந்தபோதிலும் தம்மை இலங்கையர்கள் என்றே அடையாளப்படுத்தியிருந்தனர்.

இதன்காணமாக தமது கடின உழைப்பு, மற்றும் தாம் கொண்டிருந்த தனித்துவங்கள் என்பவற்றையெல்லாம் இலங்கையர்கள் என்றே அர்ப்பணித்திருந்தனர். ஆனால், சுதந்திர இலங்கையில் அனைத்து இலங்கையர்களும் சுதந்திரக் காற்றை சுவாசிக்கும் நிலைமாறி பெரும்பான்மை சிங்கள மக்களே கல்வி, தொழில் வாய்ப்பு உட்பட அனைத்து துறைகளுக்கும் உரித்துடையவர்கள் என்ற பேரினவாத மேலாதிக்க போக்கே தலைதூக்கியிருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

வடக்கு - கிழக்கில் மூன்று தசாப்த காலமாக நிலவிய கொடிய யுத்தம் கூட இன வன்முறைகளுக்கெதிரான வெளிப்பாடாகவே அமைந்திருந்தது.

இனக்கலகங்களின் வடிவில் இன ரீதியான முறுகல்கள் ஆரம்பித்து நாளடைவில் ஆசியாவிலேயே ஒரு நீண்ட கால யுத்தமாகவே வடக்கு - கிழக்கு தமிழர்களின் தனித்துவத்துக்கான போராட்டம் உருப்பெற்றிருந்தது.

சுமார் மூன்று தசாப்தகால யுத்தம் வடக்கு - கிழக்கில் தமிழர்கள் வசமிருந்தவற்றையும் இல்லாதொழித்ததோடு, அகதிகளாகவும் புலம்பெயர்ந்தவர்களாகவும் சொந்த வாழ்விடங்களை விட்டும் தமிழர்களை வெளியேற வைத்திருந்தது. இதன் மூலம் யுத்த காலத்தில் ஏற்பட்ட இழப்புகளோடு வாழ்விடங்களிலிருந்து வெளியோரால் தமிழர்களது பூர்வீக பிரதேசங்களில் ஏற்பட்ட வெற்றிடங்களும் பாரியளவினதாகவே காணப்பட்டிருந்தது.

இதுதவிர, காணாமல் ஆக்கப்பட்டோரை தேடியும் சிறைகளில் விசாரணைகளின்றி தடுத்துவைக்கப்பட்டுள்ளோரை விடுதலை செய்யக் கோரியும் வடக்கு - கிழக்கில் எழுப்பப்பட்டு வரும் கூக்குரல்கள் அந்த மாகாண மக்கள்மீதான அடக்கு முறைகளை மேலும் வெளிப்படுத்துவதாகவே இருக்கின்றது.

இதுதவி, சுதந்திரமடைந்ததன் பின்னர் வடக்கு - கிழக்கில் காணப்பட்டிருந்த தொழிற்சாலைகள் இன்றும் இடிபாடுகளுடன் இருக்கின்றன. அத்துடன், வடக்கிலும் கிழக்கிலும் விவசாய நிலங்களும் பறிபோனவையாகவே இருக்கின்றன.

இத்தகைய பின்னணியில் தற்போது வடபகுதியில் தமிழ் மீனவர்களின் மீன்பிடி உரிமைகளும் கடலில் இந்திய மீனவர்களால் சவாலுக்குட்படுத்தப்பட்டதாகவே இருக்கின்றது. தமக்குரிய கடல் பரப்பில் தம்மால் சுதந்திரமாக மீன்பிடிக்க முடியாது வட பகுதி மீனவர்கள் தற்போது முகங்கொடுத்துள்ள நிலையில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை தடுப்பது குறித்து தம்மால் உத்தரவாதம் வழங்க முடியாதெனவும் வடக்கே கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இலங்கையின் 74 வருடகால சுதந்திரம் என்பது இன ரீதியாக ஒருசாராருக்கு மட்டுமே உரித்துடையதாக இருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
பல நாட்களாக இருந்து வந்த பிரச்னை ஒன்று தீரும். வியாபார விஷயங்களில் எதிரிகளை சமாளிப்பீர்கள். முயற்சிகளை அதிகப்படுத்தி வெற்றி காண்பீர்கள்.

**இடபம்**
மேலதிகாரியின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவீர்கள். பணியில் அலட்சியம் வேண்டாம். பேச்சினால் நன்மை வரும். இனிய பேச்சு வார்த்தையால் பிரச்னைகளை தீர்ப்பீர்கள்.

**மிதுனம்**
தள்ளிப்போட்ட நல்ல விஷயத்தை இன்று செய்து முடிப்பீர்கள். குடும்பத்தினர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். மற்றவர்களிடம் பேசும்போது மிகக் கவனம் தேவை.

**கடகம்**
நெருங்கிய நண்பர்களுடன் வாக்குவாதம் செய்ய வேண்டாம். நிம்மதியான நாள். யாருக்கும் ஆலோசனை வழுங்காதீர்கள். நல்ல செய்தி எதிர்நோக்கியவர்களுக்கு அது தாமதமாக வரும்.

**சிம்மம்**
சுப விஷயங்களுக்கான பேச்சு வார்த்தை சுமூகமாக முடியும். நீண்ட நாளாக நீங்கள் விருப்பப்பட்ட விஷயம் தானே நடக்கும். எந்தவொரு புது முடிவு எடுத்தாலும் அது நன்மையே தரும்.

**கன்னி**
இன்று வம்பில் மாட்ட வாய்ப்புள்ளதால் கவனமாக இருங்கள். பொறுப்பான வேலையில் உள்ளோர் கவனமாகச் செயல்படுங்கள். புதிய தீர்மானம் பற்றி நல்ல முடிவுக்கு வருவீர்கள்.

**துலாம்**
பல நாட்களாக ஆர்வமாகச் செய்த முயற்சி பலனளிக்கும். புதிய பொறுப்பு ஏற்று செய்ய வேண்டிய கட்டாயம் உங்களுக்கு வரும். உங்களின் கவுரவம் உயரும்படியான செயல்களைச் செய்வீர்கள்.

**விருச்சிகம்**
தாமதப்பட்ட விஷயம் ஒன்றை முனைப்புடன் செய்து முடிப்பீர்கள். உழைப்பினால் முயற்சி கை கூடும். தாயாருடன் நல்லுறவு உண்டு. குடும்பத்தில் ஒருவருக்கு கவலையளித்து வந்த பிரச்னை தீரும்.

**தனுசு**
குடும்ப விஷயம் பற்றிய நல்ல செய்திகள் வந்து சேரும். பயம் நீங்கி இன்றைய நாள் குதூகலமான நாளாக அமையும். யாரிடமும் உணர்ச்சிவசப்பட்டுப் பேச வேண்டாம்.

**மகரம்**
குடும்ப ஒற்றுமை மேம்படும். உற்சாகமான நாள். வியாபார போட்டிகளை முறியடிப்பீர்கள். கவலை தீரும். முன்பு இருந்ததை விட அதிகமாக உழைக்க வேண்டி வரும்.

**கும்பம்**
சமீபத்திய நிகழ்ச்சிகள் அளித்த மனக்கலக்கம் இன்று தீரும். சில விஷயங்களை அலைந்து திரிந்து முடிப்பீர்கள். நீண்ட நாளாக இருந்து வந்த பயம் தீரும். நட்பு வட்டம் விரியும்.

**மீனம்**
பணியாளர்களுக்கு பொறுப்பு கூடும். இருந்தாலும் உற்சாகம் குறையாது. வாகனத்தை சீர் செய்வீர்கள். புதிய பொறுப்பை ஏற்பீர்கள். உழைப்பினால் நன்மை வரும். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

# அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணனின் 6.5 கோடி ரூபா சொத்துகள் முடக்கம்

சென்னை, பெப் 03

தமிழக மீன்வளத் துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணனின் .6.5 கோடி ரூபா சொத்துகள் நேற்று அதிரடியாக முடக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ஜெயலலிதா தலைமையிலான அதிமுக ஆட்சியில் அனிதா ராதாகிருஷ்ணன் கால்நடை மற்றும் வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சராக பதவி வகித்தார்.

அப்போது, வருமானத்துக்கு அதிகமாக ரூ.4.9 கோடி அளவுக்கு சொத்து சேர்த்ததாக அவர் மீது 2006இல் தூத்துக்குடி லஞ்ச ஒழிப்பு பொலிஸார் வழக்கு தொடர்ந்தனர். ஊழல் தடுப்புச் சட்டம்,1998இன்கீழ் அனிதா ராதாகிருஷ்ணன் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது. அதை அடிப்படையாக வைத்து அமலாக்கத் துறையும் அனிதா ராதாகிருஷ்ணன் மீது வழக்குப்பதிவு செய்து விசாரித்து வந்தது.

பின்னர் அ.தி.மு.கவில் இருந்து விலகிய அனிதா ராதாகிருஷ்ணன் திமுகவில் இணைந்து, தற்போது மீன் வளத் துறை அமைச்சராக இருக்கிறார். இந்நிலையில், அவர் மீதான வழக்கு குறித்து அமலாக்கத் துறை விசாரணையை தொடங்கியுள்ளது. இதில், சட்ட விரோத பணப் பரிவர்த்தனை செய்ததற்கான ஆதாரங்கள் கிடைத்து இருப்பதாக அமலாக்கத்துறை தெரிவித்துஉள்ளது.

அதைத் தொடர்ந்து அனிதா ராதாகிருஷ் ணன் வாங்கிய



சொத்துகள், அவரது குடும்பத்தினர் வாங்கியசொத்துகள் என சுமார் ரூ.6கோடியே 50 லட்சம் மதிப்பிலான சொத்துகளை அமலாக்கத் துறை தற்காலிகமாக முடக்கியுள்ளது.

இதில், 160 ஏக்கர் நிலம் உட்பட அசையும் மற்றும் அசையா சொத்துகள் என 18 வகை சொத்துகளை அமலாக்கத் துறை முடக்கி இருப்பது குறிப்பிடத்தக்கது.

# உங்கள் பாராளுமன்ற உரைக்கு தமிழர்களின் சார்பில் நன்றி

## ராகுல் காந்திக்கு முதல்வர் ஸ்டாலின் செய்தி

சென்னை, பெப் 03

பாராளுமன்றத்தில் நீங்கள் ஆற்றிய கிளர்ச்சியூட்டும் உரைக்கு, அனைத்துத் தமிழர்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று ராகுல் காந்திக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

பாளுமன்றத்தில் குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் பங்கேற்று ராகுல் காந்தி பேசும்போது, “உங்கள் வாழ்நாள் முழுவதும் தமிழக மக்களை உங்களால் ஆள முடியாது.

அது உங்களால் முடியவே முடியாது” என்று பாஜகவை கடுமையாக விமர்சித்துப் பேசினார்.

மாநில அரசின் உரிமை குறித்து பாராளுமன்றத்தில் எடுத்துரைத்த ராகுலின் பேச்சுக்கு பரவலாக பாராட்டுகள் குவிந்த வண்ணம் உள்ளன.

இந்த நிலையில் பாராளுமன்றத்தில் ராகுல் காந்தியின் பேச்சு குறித்து ஸ்டாலின் தனது ருவிட்டர் பக்கத்தில், “இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கருத்தை அழுத்தமாக வெளிப்படுத்தி, பாராளுமன்றத்தில் நீங்கள் ஆற்றிய கிளர்ச்சியூட்டும் உரைக்கு, அனைத்துத்



தமிழர்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுயமரியாதையை மதிக்கும் தனித்துவமான கலாச்சாரம் கொண்ட தமிழர்களின் நீண்ட கால வாதங்களுக்காக நீங்கள் பாராளுமன்றத்தில் குரல் கொடுத்துள்ளீர்கள்” என்று பதிவிட்டுள்ளார்.

# நேர்மை அரசியலுக்கு நன்கொடை தாருங்கள்

## தேர்தலுக்கு நிதி கேட்கும் கமல்ஹாசன்

சென்னை, பெப் 03

நேர்மை அரசியலுக்கு நன்கொடை தாருங்கள் என உள்ளாட்சித் தேர்தல் களத்தில் தமது வேட்பாளர்களை இறக்கியுள்ள மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் மக்களைக் கேட்டுள்ளார்.

கமல்ஹாசன் இது தொடர்பில் பொது மக்களுக்கு எழுதிய கடிதத்தில் கூறியிருப்பதாவது:

மக்களுக்கான அரசியலைச் செய்யும் தேர்தல் போரில் பெட்டி பெட்டியாக, மன்னிக்கவும், கன்டெய்னர் கன்டெய்னராக பணம் வைத்திருக்கக் கூடிய, அசுர பலம் வாய்ந்த ஊழல்வாதிகளை எதிர்த்து களத்தில் நிற்கிறோம். இவர்களை எதிர்த்துப் போராட எங்களிடம் துணிச்சல் இருக்கிறது. திறமை இருக்கிறது. நேர்மை இருக்கிறது. ஆனால், போதிய பணம் இல்லை.

என் தொழிலில் சம்பாதிக்கும் பணத்தில் முறையாக வரி செலுத்தியது போக எஞ்சிய தொகையில் பெருமளவை நான்மக்களுக்கான அரசியலுக்குத் தான் செலவிடுகிறேன். ஆனால்பூதாகரமான ஊழல் பெருச்சாளிகளை எதிர்த்துப் போராட என் ஒருவனின் சம்பாத்தியம் போதாது. மக்களுக்கான அரசியலை செய்ய, மக்கள் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்த மக்களாகிய உங்களிடமே உரிமையுடன் கொடை கேட்கிறோம். நேர்மை அரசியலுக்கு நன்கொடை தாருங்கள் என ஊரறிய உலகறிய கேட்கிறோம்.

# சென்னை வானொலி நிலையங்களை மூடுவதா?

## அன்புமணி ராமதாஸ் கண்டனம்

சென்னை, பெப் 03

சென்னை வானொலி நிலையங்களை ஒன்றன்பின் ஒன்றாக மூடுவதா? என்று பா.ம.க. இளைஞர் அணி தலைவர் அன்புமணி ராமதாஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அன்புமணி ராமதாஸ் எம்.பி. வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு உள்ளதாவது:-

சென்னை வானொலி நிலையத்தின் முதன்மை அலைவரிசை சேவையை நிறுத்த பிரசார் பாரதி அமைப்பு முடிவு செய்திருப்பதாகவும், எந்த நேரமும் அதன் சேவை நிறுத்தப்படக்கூடும் என்று தெரியவந்துள்ளது.

சென்னை வானொலி நிலையத்தின் இரு அலைவரிசைகள் அண்மையில் மூடப்பட்ட நிலையில், சென்னை வானொலியின் அடையாளமான முதன்மை அலைவரிசையையும் மூட முயல்வது அதிர்ச்சியளிக்கிறது.

அவை அமைக்கப்பட்டுள்ள நிலங்களை தனியார்மயமாக்கி வருவாய் ஈட்டும் நோக்குடன் தான் மத்திய அலை, சிற்றலை வானொலிகளை மூட பிரசார்பாரதி திட்டமிடுவதாக கூறப்படுகிறது. இது மிகவும் தவறான முடிவு மட்டுமின்றி, தவிர்க்கப்பட வேண்டிய முடிவும் ஆகும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# இந்திய மீனவர் அத்துமீறலை கண்டித்து தனது படகு, வலைகளை எரித்த மீனவர்!

## பொலிகண்டி ஆலடிப் பகுதியில் சம்பவம்

வடமராட்சி, பெப் 04

**இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல் காரணமாக மோசமாக பாதிக்கப்பட்ட மீனவர் ஒருவர் தொடர்ந்தும் கடற்தொழில் செய்ய முடியாது எனத் தெரிவித்து தனது படகு மற்றும் வலைகளை எரித்து அழித்தார்.**

வல்வெட்டித்துறை பொலிகண்டி ஆலடிப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை காலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி கடற்தொழிலாளி சுனாமி அனர்த்தத்தின் காரணமாக படகு,வலைகள் முற்றாக இழந்திருந்த நிலையிலும் அவருக்கு எவ்வித இழப்பீடுகளும் வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் தொடர்ந்தும் கடல் தொழில் செய்து வந்த இவர் இந்திய இழுவைப் படகுகளில் அத்துமீறல் காரணமாக தொடர்ச்சியாக சொத்து அழிவுகளைச் சந்தித்து வந்துள்ளார்.



இதனால் மன உளைச்சலுக்கு உள்ளான அவர், இலங்கை அரசாங்கமும் கடற்படையும் இந்திய இழுவைப் படகுகளை ஒருபோதும் தடை செய்யப் போவதில்லை. எனவே கடலில் இறங்கி தொழில் செய்ய முடியாது. இதனால் படகு, வலைகளை வைத்திருந்து எவ்வித பிரயோசனமும் இல்லை என தெரிவித்து தனது பயன்பாட்டில் உள்ள மீன்பிடிப் படகையும் வலைகளை தீயிட்டு எரித்துள்ளேன் என தெரிவித்தார். (அ-02)





# வவுனியாவில் சேதன பசளையில் நெற்செய்கைக்கான வயல்விழா!

வவுனியா, பெப். 04

சேதன நெற்செய்கையில் 2022 ஆம் ஆண்டின் சிறுபோகத்துக்கான பயணம் எனும் தொனிப்பொருளில் வயல்விழா நேற்று வவுனியா முருகனூர் விவசாயப் பண்ணையில் இடம்பெற்றது.

வட மாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ். சிவகுமாரன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட குறித்த நிகழ்வில் மண்புழு உரம், அசோலா தாவரம், கூட்டெரு மற்றும் ஏனைய இயற்கை உரத்தில் செய்கை பண்ணப்பட்ட நெற்செய்கை வயல்கள் விவசாயிகளின் பார்வைக்காக விடப்பட்டிருந்ததுடன் விளக்கமும் வழங்கப்பட்டது.

இதேவேளை, பாரம்பரிய முறையிலான பாடல்பாடி அறுவடை செய்யும் முறைமையும் காட்சிப்படுத்தப்பட்டதுடன் சேதன பசளையில் உற்பத்தி செய்யப்பட்ட வயல் நிலத்தில் அறுவடையும் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது பாடசாலை மாணவர்களும் கலந்து கொண் டிருந்ததுடன் விவசாயிகளும் கலந்துகொண்டு பயன்பெற் றிருந்தனர். (அ)

# மஹிந்த அமரவீரவுக்கு கொரோனா!

கொழும்பு, பெப். 04

சுற்றுச்சூழல் அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கு கோவிட் தொற்று உறுதியாகியுள்ளது.

இதேவேளை, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பாராளுமன்ற அமர்வுகளில் கலந்துகொண்டவர்களில் 27 பேருக்கு கோவிட் தொற்று உறுதியாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)



# பிரதமர் மகிந்தவைச் சந்தித்து பேசினார் வடமாகாண ஆளுநர்!

கொழும்பு, பெப். 04

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா நேற்று முன்தினம் மாலை பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்துப் பேசினார்.

வட மாகாணத்தின் நிலவரங்கள், அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் தற்போது இடம்பெற்று வரும் கடற்றொழிலாளர் போராட்டங்கள் உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து இதன்போது பேசப்பட்டதாக தெரியவருகிறது. (அ)

# “ஒருலட்சம்அபிவிருத்தித்திட்டங்கள்” வேலைத்திட்டம் மன்னாரில் ஆரம்பம்

மன்னார், பெப். 04

“வரவு-செலவுத் திட்டத்தில் ஒரு லட்சம் வேலை திட்டம்“ எனும் தொனிப் பொருளிலான பாரிய அபிவிருத்தி திட்டம் நேற்று வியாழக்கிழமை மன்னார் மாவட்டத்திலும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நாட்டின் சகல பிரஜைகளினதும் வாழ்வாதாரத்தை பலப்படுத்தி நாட்டை சுபீட்சமாக மாற்றும் இந்தத் திட்டத்துக்கு 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ 100 பில்லியன் நிதி ஒதுக்கீடு செய்திருந்தார்.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட முன்மொழிவுக்கமைய கிராமத்துக்கான வேலைத்திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் 1,00,000 அபிவிருத்தித் திட்டங்கள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்வின் வழிக்காட்டலின் கீழ் நேற்று வியாழக்கிழமை காலை 8.52 மணிக்கு நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பிக்கப்பட்டன.

குறித்த நிகழ்வு மன்னார் மாவட்டத்தில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வேட்டையார் முறிப்பு கிராமத்தில் வைபவ ரீதியாக இடம்பெற்றது.



வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தானினால் மாதர் சங்கத்துக்கான சுமார் 24 லட்சம் ரூபாய் பெறுமதியான அரைக்கும் ஆலை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.

நிதி அமைச்சினால் முன்னெடுக்கப்படும் குறித்த வேலைத் திட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுக்கும் 3 மில்லியன் ரூபாய் நிதியானது இவ்வருட வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் இதனால் கிராமத்தில் தன்னிறைவான அபிவிருத்தி ஒன்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ஏ.ஸ்ரான்லி டிமெல், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர், சமுர்த்தி பணிப்பாளர், கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் குறித்த தேசிய நிகழ்வில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பூண்டுலோயாவில் புதனன்று அம்மன் கோவில் உடைப்பு!

## தாலியும் கொள்ளை

கொழும்பு, பெப். 04

பூண்டுலோயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சீன் தோட்டத்திலுள்ள அம்மன் கோவில் உடைக்கப்பட்டு, அம்மனுக்கு அணிவிக்கப்பட்டிருந்த தாலி, தங்கப் பொட்டு மற்றும் உண்டியல் என்பன களவாடப்பட்டுள்ளன.



நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ள இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பில் குறித்த தோட்டத்தின் கோவில் குழு உத்தியோகத்தர்கள் மற்றும் தோட்டத் தலைவர்கள் பூண்டுலோயா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதற்கமைய பூண்டுலோயா பொலிஸார், பொலிஸ் மோப்ப நாய்கள் மற்றும் கைரேகை நிபுணர்களின் உதவியுடன் திருடர்களை கைது செய்யும், விசாரணை வேட்டையில் இறங்கியுள்ளனர். (அ)

# ஆயுதங்களை வாங்குவதற்கு ஏன் கறுப்புப் பணம் வழங்கப்பட்டது?

## பஸிலிடம் கேள்விகளைத் தொடுக்கிறது ஐ.தே.க.

கொழும்பு, பெப். 04

**“போர்காலத்தில் இலங்கைக்கு ஆயுதம் வழங்குவதற்கு சீனா, ரஷ்யா மற்றும் இஸ்ரேல் முன்வந்திருந்த நிலையில், எதற்காக வட கொரியா தேர்வு செய்யப்பட்டது என்பது குறித்தும், ஆயுதக் கொள்வனவுக்காக ஏன் கறுப்பு பணம் பயன்படுத்தப்பட்டது என்பது தொடர்பிலும் நிதி அமைச்சர் பாராளுமன்றத்துக்கு தெளிவுப்படுத்த வேண்டும்.”**

-இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும், முன்னாள் அமைச்சருமான வஜீர அபேவர்த்தன வலியுறுத்தினார்.

ஐக்கிய தேசியக்கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

போர்க் காலத்தில் ஆயுதம் கொள்வனவு செய்யப்பட்ட விவகாரம் தொடர்பில் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்வால் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பானது தேசிய ரீதியில் மட்டுமல்ல சர்வதேச தளத்திலும் தாக்கத்தை செலுத்தக் கூடிய விடயமாக அமைந்துள்ளது.

போரின்போது கறுப்புப் பணத்தை பயன்படுத்தி வட கொரியாவில் இருந்து ஆயுதம் கொள்வனவு செய்யப்பட்டது என நிதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். நாட்டின் தற்போதைய நிதி நிலைமை குறித்து சர்வதேசத்துக்கு நம்பிக்கை இல்லாத நிலையில், நிதி அமைச்சரின் இந்த அறிவிப்பானது, சர்வதேச நிறுவனங்களின் ஒத்துழைப்பை பெறுவதில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடும். எனவே, எம்மால் எழுப் படும் 4 கேள்விகளுக்கு பாராளுமன்றத்தில் அவர் உரிய விளக்கத்தை விரைவில் வழங்க வேண்டும்.

1. ஆயுதக் கொள்வனவுக்கு எதற்காக கறுப்புப் பணம் பயன்படுத்தப்பட்டது?

2. போர் நடவடிக்கைக்கு நிதி தேவையெனில் பாராளுமன்றம் ஊடாக பெற்றிருக்கலாம். எனவே, நிதி பெறப்பட்ட வழிமுறைகள் மற்றும் இடங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தல் அவசியம்.

3. சீனா, ரஷ்யா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் ஆயுதம் வழங்குவதற்கான ஒத்துழைப்பை வழங்கிவந்த நிலையில், எதற்காக வடகொரியா தேர்வு செய்யப்பட்டது?

4. வடகொரியாவில் இருந்து வாங்கப்பட்ட ஆயுதங்கள் எவை? அவை உரியவகையில் தரவுக் கட்டமைப்பில் பதிவுசெய்யப்பட்டனவா?. (அ)



# I லட்சம் பணிகளை முன்னெடுக்கும் வேலைத்திட்டம் கிளிநொச்சியிலும்!

கிளிநொச்சி, பெப். 04

வரவு-செலவு திட்டத்தின் கீழ் ஒரு லட்சம் பணிகளை முன்னெடுக்கும் தேசிய வேலைத்திட்டம் நேற்று கிளிநொச்சியிலும் ஆரம்பிக்கப் பட்டது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மாவட்ட நிகழ்வு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் பாரதிபுரம் பகுதியில் இடம்பெற்றது.

தேசிய நிகழ்ச்சித்திட்ட நேரமான 8.52 மணிக்கு குறித்த பிரதேசத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தின் விஸ்தரிப்புக்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சரவணபவன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ)

# மருத்துவபீட மாணவர் மீது தாக்குதல்: இராஜாங்க அமைச்சரின் மகன் கைது!

கொழும்பு, பெப். 04

ராகம மருத்துவ பீடத்தின் மாணவர்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோவின் புதல்வர் கைது செய்யப் பட்டுள்ளார்.

களனி பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் மாணவர்கள் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பில் இவர் ராகம பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளதாக தெரிவிக்கப் பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பில் களனிப் பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் மேற்பார்வையில் 2 விசேட பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன.

இந்நிலையில், தாக்குதலில் காயமடைந்த 3 மாணவர்களில் இருவர் ராகம போதனா வைத்தியசாலையிலும் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக நீர் கொழும்பு பொது வைத்திய சாலையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# தேசிய சுதந்திர தின நிகழ்வை புறக்கணிக்கும் மல்கம் ரஞ்சித்

கொழும்பு, பெப். 04

ஜனாதிபதி தலைமையில் நடைபெறும் தேசிய சுதந்திர தின நிகழ்வில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இம்முறை கலந்துகொள்ளமாட்டார்.



கத்தோலிக்க சபையின் ஊடகப் பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி பெர்ணான்டோ, கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இந்த தகவலை வெளியிட்டார்.

அத்துடன், சுதந்திர தினத்தன்று பேராயரின் பங்கேற்புடன் நடத்தப்படும் தேவ ஆராதனையும் இடம்பெறாது எனவும் அவர் கூறினார்.

பொரளையில் தேவாலயமொன்றில் கைக்குண்டு மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் முறையான விசாரணைகள் இடம்பெறவில்லை என சுட்டிக்காட்டி, அதற்கு எதிர்ப்பை வெளியிடும் விதத்திலேயே அவர் இந்த முடிவை எடுத்துள்ளார். (அ)

# எரிபொருள் விலை எகிறாதாம்!

கொழும்பு, பெப். 04

எரிபொருள் விலையை மேலும் அதிகரிப்பதற்கான எண்ணம் தற்போது இல்லை என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

எரிபொருள் விலையை அதிகரிப்பதற்கு அனுமதி கோரி அடுத்த வாரம் அமைச்சரவை யோசனை ஒன்று முன்வைக்கப் படவுள்ளது எனத் தகவல் வெளியாகி உள்ளது எனவும், விலை அதிகரிக்க உத்தேசம் உள்ளதா எனவும் ஊடகவிய லாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளிக்கும் போதே நிதி அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

விலை அதிகரிக்கும் நிலை ஏற்பட்டால் அது குறித்து மகிழ்ச்சி அடைய முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

எனினும், எரிபொருள் விலை அதிகரிக்கப்படும் என்றோ அதிகரிக்கப்படாது என்றோ நிதி அமைச்சர் உறுதியாக எதனையும் தெரிவிக்கவில்லை.

அதேவேளை, மத்திய வங்கியால் தொடர்ச்சியாகப் பணம் அச்சிடப்படுவது தொடர்பிலும் இதன்போது கேள்வி எழுப்பப்பட்டது.

பணம் அச்சிடுவது தற்போதைக்கு நிறுத்தப்படாதுத எனவும், தனது கையெழுத் திட்ட பணம் வெளிவரும் வரை அது தொடரட்டும் எனவும் நகைச்சுவையாக அமைச்சர் பஸில் பதில் வழங்கினார். (அ)



# மீனவர்கள் போராட்டத்தில் சிறிதரன் எம்.பி. பங்கேற்பு

யாழ்ப்பாணம், பெப். 04

இந்திய படகுகளின் எல்லை தாண்டிய அத்துமீறலை நிரந்தரமாக தடுத்து நிறுத்த வலியுறுத்தி ஒருங்கிணைக்கப்பட்ட வகையில் பருத்தித்துறை - சுப்பர்மடம் பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் தொடர் சாலை மறியல் போராட்டத்தில் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் பங்கேற்றார். தொடர் சாலை மறியல் போராட்டத்தின் மூன்றாவது நாளாகிய நேற்று முன்தினம் இரவு பருத்தித்துறை - சுப்பர்மடம் பகுதிக்கு நேரில் சென்று ஆதரவு தெரிவித்து கலந்துரையாடினார். (அ)

### நெருக்கடியில் இருந்து மீள்வதற்காக

# சர்வதேச நாணய நிதியத்திடம் ஆலோசனை கோரும் இலங்கை!

கொழும்பு, பெப். 04

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வது தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்திடம் ஆலோசனை பெறுவது தொடர்பாக நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்று வெளியிட்ட அறிவிப்பு தொடர்பில் இலங்கை மத்திய வங்கி நேற்று விளக்கமளித்துள்ளது.

இலங்கையின் தற்போது பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு வரும் நிலையில் அதிலிருந்து மீள்வதற்கு நிபுணர்களின் ஆலோசனை கோரி சர்வதேச நாணய நிதியத்துக்கு இலங்கை எழுத்து மூலம் அறி வித்துள்ளதாக அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இதனை ஏற்று சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் விரைவில் இலங்கை வருவார்கள் என எதிர்பார்ப்பதாக அவர் மேலும் கூறினார்.

இந்நிலையிலேயே சர்வதேச நாணய நிதியத்திடம் ஆலோசனை மற்றும் வழக்கமான தொழில்நுட்ப ரீதியாக உதவி மட்டுமே கோரப்பட்டுள்ளதாக மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் நேற்று தெளிவுபடுத்தியுள்ளார். (அ)

# மீனவர்களை மோதவிட்டுவிட்டு வேடிக்கை பார்க்கின்றது அரசு!

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு



**கொழும்பு, பெப். 04**

**“இலங்கை - இந்திய மீனவர்களை மோத விட்டுவிட்டு ராஜபக்ஷ அரசு வேடிக்கை பார்க்கின்றது.”-இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டினார்.**

இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து யாழ்ப்பாணம் மாவட்ட மீனவர்கள் முன்னெடுத்துவரும் போராட்டம் தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்னையிலும் ராஜபக்ஷ அரசு அரசியல் இலாபம் தேடுகின்றது. அதனால்தான் இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காணும் விடயத்தில் இந்த அரசு பின்னடிக்கின்றது. நாட்டின் நலன் கருதி - வடக்கு கரையோர மக்களின் நன்மை கருதி இந்திய அரசுடன் இது தொடர்பில் அரசு பேச்சு நடத்தவேண்டும்.

இந்திய மீனவர்களின் அத்துமீறலால் வடக்கு கடல் வளம் பாதிக்கப்படுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

வடக்கு மீனவர்களின் உணர்வுமிக்க போராட்டத்துக்கு உரிய தீர்வு கிடைக்க வேண்டும்-என்றார். (அ)




# 200 கிலோ போதைப்பொருள்களுடன் 9 ஈரானியர்கள் அதிரடியாகக் கைது!

கொழும்பு, பெப். 04

ஈரானில் இருந்து கடல்வழியாக கப்பல் ஒன்றில் 200 கிலோ கிராம் போதைப் பொருள் இலங்கைக்கு கடத்தி வந்த ஈரான் நாட்டைச் சேர்ந்த ஒன்பது பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கடல் எல்லையில் வைத்து கைது செய்யப்பட்ட ஒன்பது பேரும், கொழும்பு கடற்படை தளத்துக்கு நேற்று வியாழக்கிழமை கொண்டுவரப்பட்டனர் என பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரி ரி.ஏ.டி.ஏ.ரி. சுபோதவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் எல்.கே.டபிள்யூ.கமல் சில்வாவின் பணிப்புரைக்கமைய மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாரசிங்கவின் வழிகாட்டலில் பொலிஸ் குழுவினர் கடற்படையுடன் இணைந்து, சுமார் 15 தினங்களுக்கு மேலாக இரவு பகலாக கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது ஈரானில் இருந்து 200 கிலோகிராம் போதைப் பொருளை கடத்தி வந்த கப்பலை கடலில் வைத்தே வழிமறித்துள்ளனர். இதன்போது 200 கிலோகிராம் போதைப் பொருளை, கடத்தல் காரர்கள் கடலில் தூக்கிப்போட்டுள்ளனர். எனினும், ஒன்பது பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் தங்கள் பாவனைக்காக வைத்திருந்த போதைப் பொருள் மட்டுமே கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்ட கடத்தல் காரர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர். (அ)

# ஆசிரியர் இடமாற்றத்தை எதிர்த்து வட்டு இந்து மாணவர் போராட்டம்

யாழ்ப்பாணம், பெப். 04

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப ஆசிரியர் இடமாற்றத்துக்கு எதிராக நேற்று கல்லூரி மாணவர்களும், பழைய மாணவர்களும் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் கருத்து தெரிவிக்கையில்-



கடந்த பல மாதங்கள் அசாதாரண சூழ்நிலை காரணமாக பாடசாலை மூடப்பட்டிருந்தது. அந்த நிலைமை நீங்கி தற்போதுதான் பாடசாலையின் செயற்பாடுகள் ஓரளவு சுமூக நிலைக்கு வந்துள்ளன.

இந்நிலையில் ஆசிரியர் இடமாற்றம் என்பது எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. எமது பாடசாலை ஆசிரியரை வேறு பாடசாலைக்கு அனுப்பிவிட்டு வேறு ஒரு ஆசிரியரை வாரத்தில் மூன்று நாளைக்கு மாத்திரம் எமது பாடசாலைக்கு கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளது.

இவ்வாறு மூன்று நாளைக்கு மட்டும் ஒரு ஆசிரியரை நியமித்தால் நமது பாடத்திட்டங்களை சரியான நேரத்தில் சரியான விதத்தில் முடிக்க முடியுமா? அத்துடன் எமது பாடசாலை தேசிய பாடசாலையாக தற்போது தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

எனவே எமது நிலையை கருத்தில் கொண்டு உரிய அதிகாரிகள் எமக்கு தீர்வைப் பெற்றுத் தரவேண்டும்-என்றனர்.

இதன்போது அவ்விடத்துக்கு சென்ற வலயக்கல்விப் பணிப்பாளர், அதிபர் மற்றும் மாணவர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார். அதன்பின்னர் இடமாற்றம் செய்த ஆசிரியரை மற்றைய இரு நாட்களும் கடமையில் ஈடுபடுத்துவதாக கோட்டக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்தார்.

அதற்கு மாணவர்களும் சம்மதம் தெரிவித்தனர். அதனைத் தொடர்ந்து மாணவர்களது போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. (அ)

# நாட்டின் சுதந்திர தினம் எங்களுக்கு கரி நாளே!

## மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் சங்கம் தெரிவிப்பு

மன்னார், பெப். 04

இலங்கையின் சுதந்திர தினமான இன்று வெள்ளிக்கிழமை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாங்கள் சுதந்திர தினத்தை கரி நாளாக அனுஷ்டிப்பதாக மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கத்தின் தலைவி மனுவல் உதயச் சந்திரா தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி இலங்கை சுதந்திர தினம். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாங்கள் அந்த நாளை கரி நாளாக அனுஷ்டிக்க இருக்கிறோம்.

எங்கள் உறவுகளுக்காக வீதிகளில் நின்று போராட்டங்கள் செய்து எந்த ஒரு பிரயோசனமும் இல்லாத நிலையில் இந்த சுதந்திர தினத்தில் கரி நாளாக நாங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளிவாய்க்கால் முற்றத்தில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியவில் அனுஷ்டிக்க இருக்கிறோம்.

அதனால் வீதிகளில் நின்று போராடும் தாய்மார்களுக்கு வலு சேர்ப்பதற்காக வர்த்தக சங்கங்கள், பள்ளி மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், தனியார் நிறுவனங்கள், அரசியல்வாதிகள், சமூக நிறுவனங்கள், சமூகத் தொண்டர்கள் , மனித உரிமை செயற்பாட்டாளர்கள், அனைவரும் முள்ளிவாய்க்கால் முற்றத்தில் எம்மோடு வந்து நின்று எமக்கு ஆதரவு தரவேண்டும்.

மேலும் ஒவ்வொரு மாவட்டமாக நீதியமைச்சர் வருகை தந்தார். ஆனால் அவர் நீதி அமைச்சராக வரவில்லை. நிதியமைச்சர் ஆகவே வந்தார். அதனால் சில மாவட்டங்களில் அவரைச் சந்திப்பதையும் நாங்கள் தவிர்த்துக்கொண்டோம்.

அவருக்கு தெரியும் நாங்கள் நிதிக்காகப் போராட வில்லை. எங்களுடைய உறவுகளுக்காக போராடுகிறோம் என்று.

அதேபோல் மன்னாருக்கு 13 திணைக்களங்கள் வருவதாக இருந்து இறுதியில் வந்தது 7 திணைக்களம். அதில் காணாமற்போனோர் அலுவலகம் மன்னாருக்கு வந்து 4 வருடங்கள் ஆகின்றது.

இன்று வரை அது எந்த ஒரு செயற்பாடுகளையும் செய்யவில்லை. அது அரசாங்கத்துக்கும் தெரியும். இருந்தும் ஜனாதிபதி நீதி அமைச்சரை அனுப்பி ஒவ்வொரு மக்களாக சந்தித்து எதிர்வரும் ஜெனிவா கூட்டத்தொடரில் அரசாங்கத்துக்கு சாதகமாக மாற்றுவதற்கு செயல்பட்டு வருவதாக அறிய முடிகிறது.

எனவே நாங்கள் இங்குள்ள இலங்கை அரசாங்கத்தை நம்பவில்லை. எங்களுக்கு சர்வதேச நீதி வேண்டும். ஆகவே தான் வர இருக்கின்ற சுதந்திர தின நிகழ்வின் போது முள்ளிவாய்க் கால் முற்றத்தில் கரி நாளாக அனுஷ்டிக்க இருக்கிறோம்-என்றார்.(அ)

# இலங்கைக்கு 200 மில்லியன் டொலர் கடனாக வழங்குன்றது பாகிஸ்தான்

கொழும்பு, பெப். 04

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து பெற்ற ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கடனை திருப்பிச் செலுத்தும் வகையில், இலங்கைக்கு 200 மில்லியன் டொலர் பெறுமதியான கடனை வழங்க பாகிஸ்தான் தயாராகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பாக பாகிஸ்தான் ஊடகங்களை மேற்கோள்காட்டி தென்னிலங்கை ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து 1 பில்லியன் டொலர் கடனைத் திருப்பிச் செலுத்திய பின்னர், அரிசி மற்றும் சிமெந்து கொள்வனவு செய்வதற்கு இலங்கைக்கு 200 பில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக வழங்க அந்நாடு எதிர்பார்த்துள்ளதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# 13 தப்பிப்பிழைக்குமா?

அழகு குணசீலன்



தமிழ்தேசியக்கூட்டமைப்பின் நல்லாசியுடன் ஆட்சியில் அமர்ந்த நல்லாட்சி இனப்பிரச்சினைக்கு தீர்வாக கொண்டுவரவிருந்த புதிய அரசியல் அமைப்பு காலத்தால் கனியவில்லை என்று தமிழ்த்தேசிய கூட்டமைப்பு கூறி வருகிறது. ஒரு நாடு ஒரே சட்டம் பேசும் இன்றைய அரசாங்கம் மற்றொரு புதிய அரசியல் அமைப்பு பற்றி ஆரம்பத்தில் இருந்தே பேசிப் பேசி தற்போது அந்த முயற்சி ஒரு குழு வரை ஆமை வேகத்தில் நகர்ந்திருக்கிறது.

புதிய அரசியல் அமைப்பு குறித்த சிபார்சுகளைச் செய்வதற்காக ஜனாதிபதியினால் அமைக்கப்பட்டுள்ள குழு இது. அரசியல் கட்சிகள்,பொது அமைப்புகள், குழுக்கள், தனிநபர்கள் ஆகியோரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆலோசனைகளை கவனத்தில் கொண்டு அரசாங்கத்திற்கு சிபார்சுகளைச் செய்வதே இக்குழுவின் கடமை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தமிழ், முஸ்லீம், மலையக தமிழ்பேசும் தேசிய இனங்கள் சார்ந்த அரசியல் கட்சிகள் பலவும் இனப்பிரச்சினைக்கான ஒரு நீண்ட கால தீர்வை அடைவதில் முரண்பாடான கொள்கைகளைக் கொண்டுள்ளன. அதுவும் 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த, இந்திய - இலங்கை சமாதான உடன்பாட்டின் ஒருபங்காளியான இந்திய மத்திய அரசை பெரும்பான்மையான தமிழ் தேசியக் கட்சிகள் கோரியிருக்கின்றன.

இக் கடிதத்திற்கான உடனடிக் காரணம் புதிய அரசியல் அமைப்பில் 13ஐ அகற்றிவிடுவார்கள் என்ற தமிழ் தேசியத்தரப்பின் அச்சமாகும். இந்தச் சூழலில் அரசியல் அமைப்புக்குழுவின் நியமனம் வெளிவந்திருப்பது அரசியல் முக்கியத்துவம் பெறுகிறது. நிலத்திலும், புலத்திலும் தமிழ்பேசும் தரப்புக்களுக்கிடையே நிலவும் முரண்பாடுகள் இந்த முக்கியத்துவத்தை மேலும் கனதியாக்குகின்றன.

இந்த முரண்பாடுகள் உண்மையில் இந்தியாவின் அனுசரணையுடன் அடையக்கூடிய இலக்குக்கும், அடைய முடியாத இலக்குக்கும் இடையிலான முரண்பாடாக விஸ்வருபம் எடுத்து வருகிறது . மறுவார்தைகளில் வடித்தால் தமிழ்த் தேசியத்திற்குள்நடக்கும் ஒற்றையாட்சிக்கும், சமஷ்டியாட்சிக்கும் இடை யிலான ஒரு கருத்துப்போர் எனலாம். இதில் இந்தியாவின் நிலைப்பாடு என்ன? இந்தியா 1980களில் இருந்து கூறிவருவது என்ன? என்பது இலங்கை அரசியல் அறியாத ஒன்றல்ல.

### அமைப்புக்களின் நிலைப்பாடுகள்

அரசாங்கத்தின் பங்காளித் தமிழ்க் கட்சிகளான,ஈ.பி.டி.பி, ரி.எம்.வி.பி. என்பன 13வது திருத்தத்தில் உள்ள அதிகாரங்கள் மாகாணசபைகளுக்கு வழங்கப்படவேண்டும் என்ற உறுதியான நிலைப்பாட்டை எப்போதும் கொண்டுள்ளன. 2009யுத்தம் முடிவுக்கு முன்னர் இருந்தே இவர்கள் இதைக் கோரிவருகிறார்கள். கிழக்குமாகாண முன்னாள் முதலமைச்சரும், மட்டக்களப்பு மாவட்ட சமகால பாராளுமன்ற உறுப்பினருமான சி.சந்திரகாந்தன் பாராளுமன்றத்தில் ஆற்றிய கன்னிப் பேச்சில் இதை தெளிவாக குறிப்பிட்டிருந்தார். கடற்றொழில் அமைச்சரும், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தான் பாராளுமன்ற அரசியலில் பிரவேசித்தது முதல் “மத்தியில் கூட்டாட்சி, மாகாணத்தில் சுய ஆட்சி” என்று கூறிவருகிறார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான தமிழரசு, ரெலோ, புளொட் என்பனவும், விக்னேஸ்வரனின் கூட்டணியில் உள்ள கட்சிகளும் 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தக் கோரி இந்தியப் பிரதமருக்கு கடிதம் அனுப்பி உள்ளனர். புலிகள் இருக்கும் வரையும் மாகாண சபையை தீண்டத் தகாத ஓர் அதிகாரப் பகிர்வு அலகாக இவர்கள் கருதினர் என்பது வேறுவிட யம். இந்தியாவின் பக்கம் தலைவைத்து படுக்கக்கூட இவர்கள் அன்று பயந்தனர்.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னனி என்ற கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை தலைவராகக்கொண்ட கட்சியினர் மாகாணசபையையும், 13வது திருத்தத்தையும் வெறும் பூச்சியம் எனநிராகரித்து “ஒரு நாடு இரு தேசம்” தீர்வை கோருகின்றனர். இந்தியப் பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதிய கட்சிகள் இந்திய முகவர்கள் என்றும், 13 வது திருத்தத்தை மக்கள் நிராகரிக்கவேண்டும் என்றும் எதிர்வரும் 30ம் திகதி பேரணி நடாத்தவுள்ளனர்.

முஸ்லீம் காங்கிரஸ், தேசிய மக்கள் காங்கிரஸ் கட்சிகள் உட்கட்சி சிக்கல்களில் சிக்கியுள்ள நிலையில் பொதுவாக 13 ஐ ஆதரித்தாலும்,மாகாணசபை கட்டமைப்புக்கள் கிழக்கு முஸ்லீம் மக்களின் விகிதாசாரம், தனியலகு குறித்த சிந்தனையில் உள்ளனர். நிபந்தனைகளுடன் 13 ஐ இவர்கள் ஆதரிப்பார்கள் என்று கொள்ளலாம். அவர்கள் எதிர்பார்த்த உறுதி தமிழ்தரப்பில் வழங்கப்படாததால் மோடியின் கடிதத்தில் முஸ்லீம்கள் தரப்பில் ஒப்பமிடப்படவில்லை.

மலையக தமிழ்க்கட்சிகளைப் பொறுத்தமட்டில் அவர்கள் 13 ஐ ஆதரிக்கும் நிலையிலையே உள்ளனர். 13க்கு அப்பால் - சமஷ்டிவரை என்ற தால்தான் இவர்கள் மோடியின் கடிதத்தில் ஒப்பமிடவில்லை. இந்த கட்சிகள் இந்தியாவுடன் முரண் படப்போவதும் இல்லை.

இதுதான் நிலத்தின் அரசியல் என்றால், புலத்திலும் அதே நிலைதான் காணப்படுகிறது. நிலத்திலும்,புலத்திலும் ஒரு பகுதியினர் 13 ஐ ஆரம்பப் புள்ளியாக வேனும் ஏற்றுக்கொள்ள, மறு பகுதியினர் முற்று முழுதாக நிராகரிக்கின்றனர். அண்மையில் லண்டனில் இடம் பெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றில் “13 ஆரம்பப்புள்ளி அல்ல புதைகுழி” என்று கோசமிடப்பட்டது.

இரா.சம்பந்தன், சுமந்திரன், மாவை. சேனாதிராசா போன்றவர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டு “தமிழ்த்தேசியத்தின் துரோகிகள்” என கூக்குரல் இடப்பட்டது. தமிழ்தேசியத் தலைமைகளின் படங்களை காலால் உதைத்து, துவைத்து, கிழித்து,செருப்பால் அடிக்கும் காட்சிகளைப் பார்க்கக்கூடிய தாக இருந்தது. இந்திய பிரதமர் மோடிக்கு கையளிக்கப்பட்ட 7 பக்க கடிதம் டென்மார்க்கில் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. 2009 மே 18 க்குப் பின்னர் தமிழ்தேசிய பாராளுமன்ற அரசியல் எதிர்நோக்கும் மிகப் பெரிய எதிர்ப்பும் நெருக்கடியும் இது. இதற்கு யார் பொறுப்பு?பின்னணியில் செயற்படுபவர்கள் யார்?

> **புதிய அரசியல் அமைப்பு 13 நீக்கி, இனப்பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய மாற்று வழி ஒன்றை முன்மொழியாத நிலையில் எதிர்தரப்பில் தேசியகட்சிகளில் வெற்றி பெற்றவர்கள் கட்சியின் நிலைப்பாட்டோடு திருப்தி அடைவார்களா? ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி, மக்கள் சக்தி போன்றனவும் 13 நீக்கப்படுவதை விரும்பி அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க வாய்ப்புண்டு. 13ஐ முதலில் நிராகரித்தவர் சஜீத்தின் தந்தை பிரேமதாசா என்பதை மறுப்பதற்கில்லை.**

### தமிழ்பேசும் பாராளுமன்ற அரசியல் முன் உள்ள கேள்விகள்

இந்த இனப்பிரச்சினை தீர்வு அரசியலில் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் மக்களால் ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப் பட்டவர்களினதும், அவர்களின் கட்சிகளினதும் எதிர்கால நகர்வு எவ்வாறு அமையும்? என்ற கேள்வி எழுகிறது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தமிழ்மக்கள் தேசிய முன்னணி 13 முற்றாக நிராகரிக்கிறது. அது ஒரு நாடு, இரு தேசத்தை - முழுமையான சமஷ்டியைக் கோருகிறது. புதிய அரசியல் அமைப்பில் 13 முற்றாக நீக்கப்பட்டால் இந்திய - இலங்கை ஒப்பந்தம் செயலிழக்கும், மாகாண சபைமுறைமை இல்லாது ஒழிக்கப்படும். அப்போது அதை ஆதரித்து தமிழ்தேசிய மக்கள் முன்னணியினர் பாராளுமன்றத்தில் அரசாங்கத்திற்கு ஆதரவாக வாக்களிப்பார்களா? அதேபோன்று புதிய அரசியல் அமைப்பு அவர்கள் கோரும் தீர்வை எட்டவில்லை என்றால் இவர்களின் நிலைப்பாடு என்ன? அதாவது பாராளுமன்றத்தின் மூலம் இனப்பிரச்சினைக்கு குறைந்த பட்சத் தீர்வைக்கூட காணமுடியாது என்றாகிறது. ஆக, சிறிலங்கா பாராளுமன்றத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு இருக்கக்கூடிய வேலை என்ன?

மோடிக்கு கடிதம் எழுதிய தரப்பினரின் நிலை என்னவாகும். 13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு இவர்கள் கோரிநிற்க அரசாங்கம் அதை முற்றாக ஒழித்து மாகாணசபைக்கான அதிகாரப் பகிர்வை மறுத்தால் கொள்கைப்படி அதை அவர்கள் பாராளுமன்றத்தில் எதிர்ப்பார்கள் (?). மறுபக்கத்தில் புதிய அரசியல் அமைப்பு மீண்டும் ஒற்றையாட்சியை முதன்மைப் படுத்தி ஒருநாடு ஒருசட்டம் பேசினால் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினதும், சகாக்களினதும் நிலைப்பாடு என்ன?

அது தமிழ்த்தேசிய பாராளுமன்ற அரசியலில் ஏற்படுத்தக்கூடிய தாக்கம் என்ன? அரசியல் அஸ்தமனம் அல்லது தற்கொலையாக அமையலாம். இந்த வினா முஸ்லீம் கட்சிகளுக்கும், மனோ கணேசன் தரப்பினருக்கும் பொதுவானதாக அமைகிறது. ஆனால் பதில் ஒன்றல்ல.

புதிய அரசியல் அமைப்பு 13 நீக்கி, இனப்பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய மாற்று வழி ஒன்றை முன் மொழியாத நிலையில் எதிர்தரப்பில் தேசிய கட்சிகளில் வெற்றி பெற்றவர்கள் கட்சியின் நிலைப்பாட்டோடு திருப்தி அடைவார்களா? ஐக்கிய தேசியக் கட்சி, ஜே. வி.பி, மக்கள் சக்தி போன்றனவும் 13 நீக்கப்படுவதை விரும்பி அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க வாய்ப்புண்டு. 13ஐ முதலில் நிராகரித்தவர் சஜீத்தின் தந்தை பிரேமதாசா என்பதை மறுப்பதற்கில்லை.

அரசாங்கத்தரப்பை நோக்கினால் ஈ.பி.டி.பி.யும், ரி.எம்.வி.பி.யும் தாம் கோருகின்ற 13ஐ நீக்கி மாகாணசபைகளை இல்லாமல் செய்தால் பிள்ளையானும், டக்ளஸும் இதற்கு எதிராக வாக்களித்து தமது நிலைப்பாட்டின் உறுதியை வெளிப்படுத்துவார்களா? பிராந்தியத்தில் சுயாட்சியைப் பேசிய டக்ளஸ் இடமும், பிராந்திய அரசியலே எனது மூச்சு என்ற சாரப்படி கூறிவரும் பிள்ளையானிடம் இருந்தும் மக்கள் இதையே எதிர்பார்ப்பார்கள். அப்படி இல்லையேல் அரசாங்கத்தின் புதிய அரசியல் அமைப்பு மாகாணசபைக்கு மாற்றான ஒரு அதிகாரப்பகிர்வு அமைப்பை முன் வைக்கவேண்டும் என கோரும் பொறுப்பு இவர்கள் இருவருக்கும் உண்டு.

அரசாங்க கட்சியைச் சார்ந்த வியாழேந்திரன், அங்கயன், சுரேன் இராகவன் ஆகியோரின் நிலைப்பாடு என்ன? இவர்கள் பிராந்திய அரசியல் பற்றி நாம் கணக்கில் எடுக்கவில்லை, தேசிய அரசியல் ஊடாக உரிமையையும், அபிவிருத்தியையும் பெறத் தொடர்ந்து செயற்படுவோம் என்று பிரகடனம் செய்யப்போகிறார்களா?

அப்படியானால் உரிமையும், அபிவிருத்தியும் பேசுகின்ற டக்களஸ் தேவானந்தாவும், சிவநேசதுரை சந்திரகாந்தனும் அப்படியொரு முடிவுக்கு வந்தாலும் ஆச்சரியப்படுவ தற்கல்ல. ஏனெனில் இவர்கள் பிராந்திய, மாவட்ட கட்சிகளையும், சிறிய கட்சி களையும் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற நிலையில் மலையக, மற்றும் முஸ்லீம் கட்சிகளுக்கு சமமான அணுகுமுறையையும், தந்திரோபாயத்தையும் கவனத்தில் கொள்ளவேண்டிய தேவை தவிர்க்க முடியாததாக இருக்கும்.

உண்மையில் இது தேசிய அரசியல் நீரோட்டத்தில் கலப்பதாகவும் அமையும். இலங்கையின் சிறிய கட்சிகளின் அரசியல் வரலாற்றில் இது ஒன்றும் புதிதும் அல்ல முதன்முதலும் அல்ல.

அரங்கம்

# பறக்கும் கணினியான F35C போர் விமானத்தை மீட்க அமெரிக்கா, சீனா மல்லுக்கட்டுவது ஏன்?






கிளேர் ஹில்ஸ்

**இந்த போர் விமானம், பல்வேறு அதி நவீன இரகசிய சாதனங்களால் நிறைந்தது. அது விழுந்த இடம் சர்வதேச எல்லைக்குள் வருவதால் பலநாடுகளும் அதைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளன. யார் முதலில் அதைக் கண்டுபிடிக்கிறார்களோ, அவர்கள் வெற்றி பெற்றதாகக் கருதப்படும். இத்தனை சிரமப்பட்டு அந்த போர் விமானத்தைக் கடலில் தேடிக் கண்டுபிடிப்பதால் கிடைக்கும் பரிசு என்ன? இந்த விலை உயர்ந்த போர் விமானத்தின் பின்னிருக்கும் இரகசிய போர் தொழில்நுட்பங்கள்தான்.**

கடலில் விழுந்த அமெரிக்கக் கடற்படைக்குச் சொந்தமான அதிநவீன போர் விமானத்தை, சீனர்கள் மீட்பதற்கு முன், தான் மீட்கவேண்டும் என்று அமெரிக்கா காலத்தோடு போட்டி போட்டு தேடிக்கொண்டிருக்கிறது.

தென்சீனக் கடலில், அமெரிக்க கடற்படை விமானம் தாங்கி கப்பல் யூ எஸ்.எஸ்.கார்ல் வின்சனில் இருந்து புறப்பட்ட F35-C வகை அதிநவீன போர் விமானம் விபத்துக்குள்ளானதாக அமெரிக்கத் தரப்பு கூறுகிறது. இந்த விமானத்தின் மதிப்பு 10 கோடி அமெரிக்க டொலர்.

இந்த போர் விமானம், பல்வேறு அதிநவீன இரகசிய சாதனங்களால் நிறைந்தது. அது விழுந்த இடம் சர்வதேச எல்லைக்குள் வருவதால் பலநாடுகளும் அதைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளன.

யார் முதலில் அதைக் கண்டுபிடிக்கிறார்களோ, அவர்கள் வெற்றி பெற்றதாகக் கருதப்படும்.

இத்தனை சிரமப்பட்டு அந்த போர் விமானத்தைக் கடலில் தேடிக் கண்டுபிடிப்பதால் கிடைக்கும் பரிசு என்ன? இந்த விலை உயர்ந்த போர் விமானத்தின் பின்னிருக்கும் இரகசிய போர் தொழில்நுட்பங்கள்தான்.

கடந்த திங்கட்கிழமை இராணுவப் பயிற்சியின் போது வின்சன் கப்பலின் தளத்தில் மோதி விமானம் கடலில் விழுந்த விபத்தில் ஏழு மாலுமிகள் காயமடைந்தனர்.

விமானம் தற்போது கடலுக்கடியில் கிடக்கிறது. ஆனால் அடுத்து என்ன நடக்கவிருக்கிறது என்பது மர்மமாகவே இருக்கிறது. போர் விமானம் எங்கிருந்து விழுந்தது என்பதையோ, அதை மீட்க எவ்வளவு நேரமாகும் என்பதையோ கடற்படை கூறாது.

தென்சீனக் கடலை முழுமையாக உரிமை கோரி வருகிறது சீனா, அதை உறுதிப்படுத்த பல முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. சீனா தென்சீனக் கடலில் உரிமை கொண்டாட எந்த வித சட்ட ரீதியிலான அடிப்படை காரணங்களும் இல்லை என, கடந்த 2016 ஆம் ஆண்டு சர்வதேச தீர்ப்பாயம் வழங்கிய தீர்ப்பையும் அங்கீகரிக்க மறுத்து வருகிறது சீனா.

“எங்களுக்கு அந்த F35C விமானத்தைக் கண்டுபிடிக்க ஆர்வம் ஏதுமில்லை” என்று வியாழக்கிழமை கூறினார் சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஜாவோ லிஜியன்.

சீனப் படை இந்த விமானத்தைத் தேடிச் செல்ல மிகவும் ஆர்வமாக இருக்கும் என அமெரிக்க பாதுகாப்பு நிபுணர்கள் கூறுகின்றனர். அமெரிக்க மீட்புக் கப்பல் குறைந்தது 10 நாட்கள் பயணம் செய்தால்தான் குறிப்பிட்ட இடத்தை அடையமுடியும்.

ஆனால், அது மிகவும் தாமதமாக இருக்கும் என்கிறார் பாதுகாப்பு ஆலோசகர் எபி ஆஸ்டன், ஏனெனில் போர் விமானத்தில் இருக்கும் கருப்பு பெட்டியின் மின்கலன் அதற்கு முன்பே போதிய மின்சாரமின்றி செயலிழந்துவிடும். அப்படி நடந்துவிட்டால், போர் விமானத்தைக் கண்டுபிடிப்பது மேலும் கடினமாகிவிடும் என்கிறார் அவர்.

“அமெரிக்கா இதை கண்டுபிடித்தாக வேண்டியது மிகவும் அவசியம்” என்று அவர் கூறுகிறார். “F35C போர் விமானம் அடிப்படையில் ஒரு பறக்கும் கணினியைப் போன்றது. இது மற்ற முக்கிய விவரங்களோடு இணைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது - “ஷூட்டர்களை இணைக்கும் இணைப்பு சென்சார்” என்று இவ்விமானத்தை அழைக்கிறது விமானப்படை.

சீனாவிடம் அப்படிப்பட்ட தொழில்நுட்பம் இல்லை, எனவே அது சீனாவின் கையில் கிடைத்தால் அவர்களுக்கு அது ஒரு பெரிய தொழில்நுட்ப பாய்ச்சலை கொடுக்கும் என்றும் கூறுகிறார் எபி ஆஸ்டின்.

### F35C இல் என்ன இருக்கிறது?

இந்த போர் விமானம் பறந்து கொண்டிருக்கும் போதே, தன்னிடமுள்ள தரவுகளைப் பகிரும் வலையமைப்பைக் கொண்டது. தாழ்வாகப் பறந்து கண்காணிக்கும் திறன் கொண்ட, விமானம் தாங்கிக் கப்பலில் இருந்தே புறப்பட்டு அதிலேயே தரையிறங்கும் திறன் கொண்ட அமெரிக்க கடற்படையின் முதல் விமானம்.

பெரிய இறக்கைகள், அருமையான லேண்டிங் கியர்களைக் கொண்டிருப்பதால், விமானம் தாங்கிக் கப்பலில் இருந்து உந்தி ஏவும் முறையில் செலுத்த கச்சித மாக ஏற்ற விமா னம் இது.

உலகின் மிக வும் சக்தி வாய்ந்த போர் விமான என்ஜினைக் கொண்டது இது. இந்த விமானம் மணிக்கு 1,200 மைல் வேகத்தில் பறக்கக்கூடியது.

வெளியே இரு ஏவுகணைகள், உள்ளே நான்கு ஏவுகணைகளைச் சுமந்து செல்லும் திறன் கொண்டது.

போர் விமான சிதைவுகளைக் கண்டு பிடிப்பதற்கான உரிமையை சீனா கோரி னால், அது அமெரிக்காவுக்கு அழுத்தம் கொடுக்கக்கூடியதாக இருக்கும் என்கிறார் அமெரிக்க படைகளின் கூட்டுத் தலைவரின் முன்னாள் ஆலோசகரும், ஐரோப்பிய ஒன்றியத்துக்கான ராஜீய அதிகாரியாக பணியாற்றிய அனுபவம் கொண்டவருமான எபி ஆஸ்டன்.

அமெரிக்க படைகள் ஒருங்கிணைப் பின்றி ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறியதாக உணரப்பட்டு வரும் இந்த அபாயகரமான காலத்தில் இப்படி ஒரு பிரச்னை வருவதாகக் கருதுகிறார் அவர்.

சீனா இந்த விமானத்தைக் கைப்பற்ற விரும்புகிறது என்பதில் சந்தேகம் இல்லை, இருப்பினும் சைபர் உளவு மூலம் அப்போர் விமானத்தின் உட்புறம், கட்டமைப்பு, செயல்பாடுகள் குறித்து ஓரளவு அறிந்திருக்க வாய்ப்புள்ளது என சீன விவகார வல்லுநரும், ட்ரூமன் திட்டத்தில் பாதுகாப்பு ஆய்வாளராக இருப்பவருமான பிரைஸ் பார்ரோஸ் கூறுகிறார்.

“அது எவ்வாறு அமைக்கப்பட்டிருக்கிறது மற்றும் அந்த விமானம் எப்படி எல்லாம் பாதிக்கப்படக் கூடியதாக இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள அவர்கள் விமானத்தின் உண்மையான பகுதிகளைப் பார்க்க விரும்புவதாக நான் கருதுகிறேன்” என்கிறார் அவர்.

யு. எஸ். எஸ். கார்ல் வின்சன் கப்பலில் ஏற்பட்ட “விபத்தை” தொடர்ந்து, மீட்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமெரிக்க கடற்படை ஓர் அறிக்கையில் ஒப்புக்கொண்டது.

### மீட்புப் பணிகள் உண்மையில் எப்படி நடக்கும்?

அமெரிக்க “நேவி சூப்பர்வைசர் ஆஃப் சால்வேஜ் அண்ட் டைவிங்“ அணியினர், விழுந்த விமானத்தின் உடற்பகுதியில் காற்றுப் பைகளை இணைத்து, மெல்ல காற்றை நிரப்பி வெளியே கொண்டு வர முயல்வர். F35-C விமானத்தின் உடற்பகுதி ஒரே துண்டாக இல்லை எனில், மீட்புப் பணிகள் சிக்கலாகலாம்.

விமானத்தில் குறைந்தபட்சம் இரண்டு ஏவுகணைகள், அதன் இறக்கைகளில் அல்லது விமானத்துக்குள்ளே ஆயுதங்கள் வைக்கும் பகுதியில் இருந்திருக்கலாம். இது மீட்பை சிக்கலாக்கும்.

1974இல், அமெரிக்கா - ரஷ்யா இடையே பனிப்போர் உச்சக்கட்டத்தில் இருந்தபோது, அமெரிக்க உளவு அமைப்பான சிஐஏ, ஒரு ராட்சத எந்திர கொக்கியைப் பயன்படுத்தி, கடலின் தரையில் கிடந்த ஒரு ரஷ்ய நீர்மூழ்கிக் கப்பலை ரகசியமாக இழுத்தது. ஹவாய் கடற்கரை அருகே இது நடந்தது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன், சீனாவின் கிழக்குக் கடற்கரையில் மூழ்கிய பிரிட்டனின் ஹெச் எம் எஸ் பொசெடான் (Poseidon) என்கிற நீர்மூழ்கிக் கப்பலை சீன ராணுவம் ரகசியமாக மீட்டது.

2011 ஆம் ஆண்டு ஒசாமா பின்லேடனின் வளாகத்தில் நடந்த தாக்குதலில் விபத்துக்குள்ளான அமெரிக்காவின் ஸ்டெல்த் ஹெலிகாப்டரின் சிதைவுகளை சீனா கைப்பற்றியதாகவும் பரவலாக நம்பப்படுகிறது.

கடந்த 2019 மே மாதத்தில் பிலிப்பைன்ஸ் கடலுக்கடியிலிருந்து, அமெரிக்க கடற்படையின் போக்குவரத்து விமானத்தின் சிதைவுகளை வெளியே எடுத்ததே கின்னஸ் உலக சாதனை படைத்த வெற்றிகரமான ஆழ்கடல் மீட்புப் பணி (5,638 மீட்டர்) என்பது குறிப்பிடத்தக்கது.

மீட்பதைத் தவிர, சீனர்களின் கையில் அந்த விமானம் கிடைக்கக் கூடாது என்றால், விமானத்தை அழிப்பது மற்றொரு தேர்வாக இருக்கிறது.

“அதன் மீது டார்பிடோ கடல் ஏவுகணையைக் கொண்டு தாக்கி அழிப்பது எளிதான காரியம்” என ராணுவ அதிகாரி ஒருவர் கூறினார். ஆனால் இந்த யோசனை தற்போது பரிசீலனையில் இருப்பதாகத் தெரியவில்லை.

- பி.பி.சி.

# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

14) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழில் எழுதுக.
i) உங்கள் பாடசாலை எது?

……………………………………………………

15) பஸ் நவதும் பொல எனும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்க் கருத்தை எழுதுக.

……………………………………………………

16) பின்வரும் எண்ணை எழுத்தில் எழுதுக.

i) 26087 ……………………………………

ii)

| | |
|---|---|
| 2 | 4 |
| 0 | 9 |


கட்டத்திலுள்ள இலக்கங்கள் அனைத்தையும் கொண்டு ஆகக் கூடிய மிகச் சிறிய எண்ணை எழுதுக.

17) தரப்பட்டுள்ள எண்களை ஏறுவரிசைப்படுத்தி எழுதுக.
8607, 6078, 8706, 2605

18) எழுத்துக்களில் தரப்பட்டுள்ள எண்களை உரோமன் எண்களில் எழுதுக.

i) ஒன்பது ……………………… ii) ஆறு …………………………

19) கீழே உருவில் காட்டப்பட்டுள்ள பென்சிலின் நீளம் யாது? …………………………




20) ஒரு பாடசாலையில் 1046 பெண் பிள்ளைகளும், 938 ஆண் பிள்ளைகளும் உள்ளனர்.
i) பாடசாலையிலுள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

……………………………………………………


ii) இப்பாடசாலையிலுள்ள ஆண்பிள்ளைகளிலும் பார்க்க எத்தனை பெண் பிள்ளைகள் கூடுதலாக உள்ளனர்?

……………………………………………………

21) எட்டு மணிக்கு பத்து நிமிடங்களாகும். என்பதை அருகில் உள்ள கடிகார முகத்தில் குறித்துக் காட்டுக.




22) பின்வரும் உருவில் $\frac{3}{4}$ ஐ நிறந் தீட்டுக.




23) 3kg 500g பாசிப் பயற்றை ஒரு பையில் 500g வீதம் எத்தனை பைகளில் இடலாம்?


……………………………………………………

## விடைகள்

14) i) ஒபே பாசல குமக்த?
15) பஸ் நிலையம்
16) i) இருபத்தாறாயிரத்து எண்பத்தேழு
ii) 2049
17) 2605, 6078, 8607, 8706
18) i) ix
ii) vi
19) 4cm
20) i) 1984
ii) 108
21)




22)



ஏதாவது 6 கோணிகளுக்கு நிழற்றுக.
23) 7


கல்வி tv CHANNEL-1

**04.02.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

கல்வி tv CHANNEL - 2

**04.02.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

## பட்டிப்பளை பிரதேச அபிவிருத்தி கூட்டம்!

பட்டிப்பளை, பெப். 04

மட்டக்களப்பு - பட்டிப்பளை பிரதேசத்தின் அபிவிருத்திக் குழுக் கூட்டம் பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சரும் பட்டிப்பளை பிரதேச அபிவிருத்திக் குழுவின் தலைவருமான சதாசிவம் வியாழேந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் பிரதேச அபிவிருத்திக்குழுவின் உப தலைவர் பரமசிவம் சந்திரகுமார், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரம் (ஜனா), மண்முனை தென் மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் எஸ். புஸ்பலிங்கம் பொலிஸ அதிகாரிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். இதன்போது பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் ஆராயப்பட்டன. (ஐ)



## மாங்காடு சரஸ்வதி ம. வியில் பெற்றோர்கள் ஆர்ப்பாட்டம்!



பட்டிருப்பு, பெப். 04

மட்டக்களப்பு மாவட்டம் பட்டிருப்பு - மாங்காடு சரஸ்வதி மகா வித்தியாலயம் முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த வருடம் நூற்றாண்டு விழாக்காணும் பாடசாலை எங்கே, பிரச்னையை உப அதிபராக நியமித்தது ஏன், கதிரைக்கு ஆள் தேவையில்லை அதிபர் ஒருவேரே இங்கு தேவை, மேலதிக ஆசிரியர்களும் முடியாத புத்தகமும், சுயாதீனமாக நீருமில்லை சுத்திகரிக்க ஆளுமில்லை, மாணவர்களுக்கு ஏற்படும் அநீதியைச் சீர்செய்வது யார், பரீட்சைகளில் சித்தியின்மைக்கு காரணம் யார், மாணவர்கள் வேறு பாடசாலைக்குச் செல்வது ஏன், தேர்ச்சியின் உயர்ச்சியா மாணவர்கள் வெளிநாடு செல்வது, காலவதியான அதிபரும் சீரழிந்த மாங்காடும், பரிதாபம் மாணவர்கள், வேண்டும் வேண்டும் புதிய தகுதியான அதிபர் என எழுத்தப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு மாங்காடு சரஸ்வதி மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டம் தொடர்பில் குறித்த பாடசாலை அதிபரிடம் கருத்துக் கேட்பதற்காக பாடசாலைக்குள் ஊடகவியலாளர்கள் சென்றபோது பாடசாலையின் உட்பக்கமாக வாயிற்கதவு பூட்டப்பட்டிருந்தது.

எனினும் அதிபரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டபோது, வலயக்கல்வி அலுவலக அதிகாரிகளிடம் தகவல்களைப் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவித்து, அவர் கருத்துத் தெரிவிக்க மறுத்துவிட்டார். (ஐ)



# ஆசிரியை இடமாற்றுமாறு கோரி வலய கல்வி அலுவலகம் முற்றுகை!

திருகோணமலை, பெப். 04

**திருகோணமலை ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரியின் ஆசிரியையை இடமாற்றக் கோரி அந்தப் பாடசாலையின் பெற்றோர்கள் நேற்று வியாழக்கிழமை வலயக் கல்வி அலுவலகத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**

நீதிமன்ற உத்தரவின் பேரில் குறித்த பாடசாலையில் நேற்று முன்தினம் கடமையேற்கச் சென்ற ஆசிரியைக்கும் பாடசாலை நிர்வாகத்துக்கும் இடையே ஏற்பட்ட சர்ச்சை காரணமாக அதிபரும், ஆசிரியையும் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிக்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

அபயா அணிந்துகொண்டு சென்றமையால் இந்த சர்ச்சை வெடித்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் நேற்று காலை 8.00 மணியளவில் பாடசாலைக்கு முன்பாக ஒன்றுகூடிய பெற்றோர் சிலர், திருகோணமலை வலயக் கல்வி அலுவலகத்துக்கு பேரணியாகச் சென்று அங்கு ஒன்றுகூடி பதாதைகளைத் தாங்கியவாறு கோஷமெழுப்பினர்.

போராட்டக்காரர்களை சந்தித்த வலயக் கல்விப் பணிப்பாளர் ஸ்ரீதரன் சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பேச்சு நடத்துவதற்கு சிலரை வருமாறு அழைத்தார். எனினும், ஆர்ப்பாட்டக்காரர்கள் இதனை ஏற்க மறுத்துவிட்டனர்.

மாணவர்களின் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் எவ்விதத்திலும் பாதிக்காத வகையில் நடந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ஸ்ரீதரன், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களிடம் கேட்டுக் கொண்டார்.

நீதிமன்ற நடவடிக்கை இருப்பதால் மாகாணக் கல்விப் பணிப்பாளர் எதிர்வரும் திங்கட்கிழமை பாடசாலை சமூகத்தோடு பேச்சு நடத்துவார் என்று பேச்சுக்கு வருவதாகத் தெரிவித்தமையைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

(ஐ)

## யானை தாக்கி தம்பதியர் காயம்!

மூதூர், பெப். 04

திருகோணமலை, மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நீனாக்கேணிக் கிராமத்தில் தோட்டத்தில் காவலுக்கு தங்கியிருந்த கணவன், மனைவியை யானை தாக்கி காயமடைந்த நிலையில் இருவரும் மூதூர் தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் பேச்சிமுத்தன் மகாலிங்கம் (60 வயது), மகாலிங்கம் சரோஜாதேவி ( 55 வயது) ஆகியோரே காயமடைந்த நிலையில் கிராம மக்களால் வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டனர். (ஐ)

## மண்முனைபற்று பிரதேசத்தில் 120 திட்டங்கள் அங்குரார்ப்பணம்!



மண்முனைப்பற்று, பெப். 04

ஒரு இலட்சம் கிராம அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நாடுபூராவும் அபிவிருத்தி திட்டங்கள் அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்கு பிரதேசத்தால் 24 கிராம சேவகர் பிரிவுகளிலும் 120 கருத்திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

அரசாங்கத்தின் சுபீட்சமிகு நாட்டை கட்டியெழுப்பும் எண்ணக் கருவுக்கு அமைவாக காலாண்டு திட்ட நடவடிக்கையாக மேற்படி அபிவிருத்தி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

மண்முனை மேற்கு பிரதேசத்தின் பிரதான நிகழ்வில் பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர், முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூ. பிரசாந்தன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# தேசிய கீதம் தமிழில் பாடாதுவிடின் தமிழ் மக்களை புறக்கணிப்பதாகும்!

## மூதூர் பிரதேச சபை உபதவிசாளர்

மூதூர், பெப். 04

சுதந்திர தினத்தில்கூட தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கப்படாவிட்டால் அது ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்களையும் அரசு புறக்கணிப்பதாகவே அமையும் என மூதூர் பிரதேச சபை உப தவிசாளர் சி.துரைநாயகம் தெரிவித்துள்ளார்.

இலங்கைவாழ் அனைத்து இன மக்களின் பங்களிப்பால் ஆங்கிலேயரின் 133 வருடகால ஆட்சிக்குப் பின்னர் 1948ஆம் ஆண்டு இன்றைய தினத்தில் இலங்கைத் தீவுக்கான சுதந்திரம் கிடைத்தது.


அந்த சுதந்திரக் காற்றை தமிழ் பேசும் மக்களும் சுவாசிப்பதற்கு அரசு இடமளிக்க வேண்டும். நாட்டின் வளர்ச்சிக்காக தமிழ் பேசும் மக்களும் தங்களுடைய பங்களிப்பை இன்றுவரை வழங்கி வருகின்றார்கள் என்பதை அரசு மறந்துவிடக்கூடாது.

இலங்கை அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின் 26ஆவது சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை பிரஜைகளின் அடிப்படை உரிமையாக மொழி உரிமை காணப்படுகின்றது. ஒருவரின் ஐந்து விரல்களை போலவே, இலங்கையர்களின் தாய் மொழியாக தமிழ் மற்றும் சிங்கள மொழிகள் காணப்படுகின்றன.

எனவே அரசு இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களுடைய உணர்வுகளையும், உரிமைகளையும் மதித்து சுதந்திரதினத்தில் தமிழ் மொழியிலும் தேசிய கீதத்தை இசைக்க வேண்டும் - என்றும் அவர் சொன்னார். (ஐ)

ஈழநாடு





# சர்வதேச விண்வெளி மையத்தை கடலில் மூழ்கடிக்க நாசா திட்டம்!

வொஷிங்டன், பெப். 04

சர்வதேச விண்வெளி மையத்தை 2031ஆம் ஆண்டு பசுபிக் பெருங்கடலில் மூழ்கடிக்க நாசா திட்டமிட்டுள்ளது.

2000ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்த விண்வெளி ஆய்வகம், பூமியிலிருந்து 227 கடல் மைல் தொலைவில் சுற்றி வருகின்றது. இந்நிலையில் அதன் ஆயுட் காலம் முடிவடைந்ததும் விண்வெளி மையத்தை பசுபிக் கடலில் மூழ்கடிக்க நாசா திட்டமிட்டுள்ளது.

எதிர்வரும் 2030ஆம் ஆண்டு முதல் இதற்கான பணிகள் தொடங்கும் என்று கூறியுள்ள நாசா அதிகாரிகள், தெற்கு பசுபிக் பெருங்கடலில் மக்கள் வசிக்காத பகுதியான பொயிண்ட் நெமோ என்று அழைக்கப்படும் பகுதியில் சர்வதேச விண்வெளி மையத்தை விழ வைப்பதே திட்டம் என்று கூறியுள்ளனர்.

(அ)

# கோவிட் தடுப்பூசி செலுத்தாத இராணுவத்தினர் பணி நீக்கம்

## அமெரிக்கா அதிரடி நடவடிக்கை

நியூயோர்க், பெப். 04

கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொள்ளாதவர்கள் அமெரிக்க இராணுவத்தில் இருந்து பணி நீக்கப்படுவார்கள் என அமெரிக்க இராணுவச் செயலர் கிறிஸ்டின் வார்முத் எச்சரித்துள்ளது.

உலகிலேயே அதிகளவிலான கொரோனா பாதிப்பு உள்ள நாடுகளில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. அங்கு பாதிப்பு எண்ணிக்கை அதிகரித்தாலும், தடுப்பூசி செலுத்துவோர் குறைவாகவே உள்ளனர்.

இதனால், தடுப்பூசி பணிகளை துரிதப்படுத்த அமெரிக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக தடுப்பூசி செலுத்திக்கொள்ளாதவர்கள் இராணுவத்தில் இருந்து பணி நீக்கம் செய்யப்படுவார்கள் என எச்சரிக்கப்பட்டுள்ளது.



அமெரிக்க இராணுவ செயலர் கிறிஸ்டின் வார்முத் தெரிவிக்கையில்-

இராணுவத்தில் தடுப்பூசி எதிர்ப்பாளர்கள் இருக்கின்றனர். இவர்களால் படைகளின் மற்ற வீரர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் அபாயம் இருக்கிறது. எனவே, தடுப்பூசி செலுத்திக் கொள்ளாத 3000இற்கும் மேற்பட்ட வீரர்கள் படிப்படி யாக விடுவிக்கப்படுவார்கள் - எனத் தெரிவித்தார்.

முன்னதாக கடற்படை, விமானப்படையை சேர்ந்த வீரர்கள் சிலர் தடுப்பூசி போட்டுக்கொள்ளாத காரணத்தால் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# உக்ரைன் எல்லைகளில் படை குவிக்கும் ரஷ்யா


## செயற்கைக் கோள் புகைப்படம் வெளியானது

மொஸ்கோ, பெப். 04

உக்ரைன் நாட்டு எல்லைகளில், ரஷ்யா தனது படைகளையும், அதிநவீன போர் கருவிகளையும் நிலைநிறுத்தியுள்ள செயற்கைக்கோள் புகைப்படங்கள் வெளியாகியுள்ளன.

உக்ரைனை கைப்பற்றும் முயற்சியில் நீண்ட காலமாக ரஷ்யா ஈடுபட்டு வருகிறது. ஆனால், ரஷ்யாவுடன் இணைவதை விரும்பாத உக்ரைன் மேற்கு நாடுகளான ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடன் இணக்கம் காட்டி வருகிறது.

நேட்டோ ராணுவ கூட்டமைப்பிலும் உக்ரைனை சேர்க்க அமெரிக்கா முயற்சித்து வருகிறது. இதனை சற்றும் விரும்பாத ரஷ்யா, உக்ரைன் மீது படையெடுக்கும் நோக்கில், தனது படைகளை அந்நாட்டு எல்லைகளில் நிலை நிறுத்தி வருகிறது.




இலட்சக்கணக்கான இராணுவ வீரர்கள், பீரங்கிகள், ஏவுகணை அமைப்பு உள்ளிட்டவற்றை அமைத்துள்ளது. அத்தோடு, ரஷ்யாவின் நட்பு நாடான பெலாரஸை ஒட்டிய உக்ரைன் எல்லையிலும் ரஷ்யாவின் படைகள் குவிக்கப்பட்டுள்ளன.

(அ)

# படிப்படியாக எல்லையை திறக்கின்றது நியூசிலாந்து

வெலிங்டன், பெப். 04

நியூசிலாந்து தனது எல்லைகளை படிப்படியாக மீண்டும் திறப்பதாக அறிவித்துள்ளது, ஏனெனில் நாடு உலகின் கடினமான கோவிட் கட்டுப்பாடுகளில் சிலவற்றை எளிதாக்கத் தொடங்குகிறது.

அவுஸ்திரேலியாவில் தடுப்பூசி போடப்பட்ட குடிமக்கள் பெப்ரவரி 27 முதல் மாநில கட்டாய ஹோட்டல் தனிமைப் படுத்தலுக்கு உட்படாமல் வீட்டுக்கு செல்லலாம்.

மார்ச் 13 முதல் பிற இடங்களில் உள்ள ஜாப் செய்யப்பட்ட குடிமக்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்று பிரதமர் ஜசிந்தா ஆர்டெர்ன் கூறினார்.

மக்கள் இன்னும் 10 நாட்களுக்கு சுயமாக தனிமைப்படுத்தப்பட வேண்டும், ஆனால் வீட்டிலேயே செய்யலாம்.

கொரோனா வைரஸைத் தடுக்க வெலிங்டனின் சர்ச்சைக்குரிய மூடிய - எல்லைக் கொள்கையின் மீதான விமர்சனங்களுக்குப் பிறகு இந்த அறிவிப்பு வந்துள்ளது.

தொற்றுநோய் காரணமாக நியூசிலாந்தின் எல்லைகள் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாக மூடப்பட்டுள்ளன.

அந்த காலகட்டத்தில், ஐந்து மில்லியன் மக்கள் வசிக்கும் நாட்டில் 53 இறப்புகள் மற்றும் சுமார் 17,000 கோவிட் வழக்குகள் பதிவாகியுள்ளன - இது உலகின் பிற பகுதிகளுடன் ஒப்பிடும்போது மிகக் குறைந்த எண்ணிக்கையாகும்.

(அ)

# தலிபான் ஆட்சியில் முதல் முறையாக பல்கலைக்கழகங்கள் மீளவும் திறப்பு

காபூல், பெப். 04

ஆப்கானிஸ்தானில் பல்கலைக்கழங்கள் திறக்கப்படடுள்ள நிலையில், மாணவர்களும், மாணவிகளும் ஒருவரை ஒருவர் சந்திக்காத வண்ணம் தனித்தனி வகுப்பறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஒகஸ்ட் மாதம் ஆப்கானிஸ்தானை மீண்டும் கைப்பற்றிய தாலிபான்கள், இதுவரை பெண்களின் உயர்கல்வி குறித்து எந்த ஒரு அறிவிப்பும் வெளியிடவில்லை. இந்நிலையில், அந்த நாட்டில் உள்ள வெப்பமான மாகாணங்களில் பல மாதங்களுக்கு பின் திறக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகங்களில் வெவ்வேறு நுழைவாயில் வழியாக மாணவர்களும், மாணவிகளும் அனுமதிக்கப்பட்டனர்.





அவர்கள் தனித்தனி வகுப்பறைகளில் அமரவைக்கப்பட்டதுடன், வகுப்பு நேரங்களும் சுழற்சி முறையில் அமைக்கப்பட்டுள்ளன. (அ)

## உலகக் கிண்ண உதைபந்து

# ஆர்ஜென்ரீனா, பிரேசில் உருகுவே அணிகள் தகுதி!



பிரேசிலியா, பெப். 04

எதிர்வரும் நவம்பரில் ஆரம்பமாகும் உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடருக்கு பிரேசில், ஆர்ஜென்ரீனாவை தொடர்ந்து உருகுவே அணியும் தகுதி பெற்றுள்ளது.

32 அணிகள் இடையிலான 22ஆவது உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடர் கட்டாரில் நடக்கவுள்ளது. இதற்கான தகுதி சுற்று போட்டி பல்வேறு நாடுகளில் நடக்கிறது.

தென்னமெரிக்க கண்டத்துக்கான தகுதி சுற்றில் 10 அணிகள் பங்கேற்றுள்ளன. இதில், முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் நேரடியாக உலகக் கிண்ணப் போட்டிக்குள் நேரடியாக தகுதி பெறும்.

இந்த அடிப்படையில், பிரேசில், அர்ஜென்ரீனா அணிகள் தகுதி பெற்றுள்ளன.

இந்த நிலையில் மொன்ட்வீடியோ நகரில் நடந்த போட்டியில் உருகுவே 4-1 என்ற கோல் கணக்கில் வெனிசுலாவை தோற்கடித்து உலகக் கிண்ணப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

உருகுவே அணியில் பென்டான்குர், அராஸ்கேட்டா, எடின்சன் கவானி, சுவாரஸ் ஆகியோர் கோல் போட்டனர்.

மற்றோர் ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனா 1-0 என்ற கோல் கணக்கில் கொலம்பியாவை வீழ்த்தியது. ஆர்ஜென்ரீனா தனது கடைசி 29 போட்டிகளில் தோல்வியையே சந்திக்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

முன்னாள் சம்பியனான பிரேசில் 4-0 என்ற கோல் கணக்கில் பராகுவேயை வீழ்த்தியது.

இன்னும் 2 லீக் சுற்று எஞ்சியுள்ள நிலையில் புள்ளி பட்டியலில் பிரேசில் (39 புள்ளி) முதலிடத்திலும், ஆர்ஜென்ரீனா (35 புள்ளி), 2ஆவது இடத்திலும் ஈகுவடார் (25 புள்ளி) 3ஆவது இடத்திலும், உருகுவே (22 புள்ளி) 4ஆவது இடத்திலும், பெரு (21 புள்ளி) 5ஆவது இடத்திலும் உள்ளன. (ஐ)

# சிறந்த பண்பாளருக்கான விருது நியூசிலாந்தின் மிற்செல்லுக்கு!



டுபாய், பெப். 04

சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.) சிறந்த பண்பாளருக்கான (ஸ்பிரிட் ஒவ் கிரிக்கெட்) விருதை நியூசிலாந்து அணியின் துடுப்பாட்ட வீரர் டேரில் மிற்செல் பெற்றுள்ளார்.

அபுதாபியில் உள்ள ஷேக் சயீத் மைதானத்தில் 2021 ஐ.சி.சி. ஆடவர் இருபது-20 உலகக் கிண்ணத்தின் முதல் அரையிறுதியில், இங்கிலாந்து மற்றும் நியூசிலாந்து அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து மொயீன் அலியின் அரைசதத்தால் 4 விக்கெட்டுக்கு 166 ஓட்டங்களை குவித்தது.

வெற்றி இலக்கை துரத்திய டேரில் மிற்செல் மற்றும் ஜேம்ஸ் நீஷம் சிறந்த இணைப்பாட்டத்தை ஏற்படுத்தினர். 18ஆவது ஓவரை அடில் ரஷித் வீசிய போது, முதல் பந்தை நீஷம் அடித்தாடினார். அந்தப் பந்தை ரஷித் தடுக்க முனைந்தபோது கிரிஸூக்குள் இருந்த டேரில் மிற்செல்லுடன் எதிர்பாராத விதமாக மோதுண்டார்.

இதனால், பந்தை ரஷித்தால் தடுக்க முடியவில்லை, அது நேரகாக லோங் திசை நோக்கி சென்றது.

இந்த தருணத்தில் ஜேம்ஸ் நீஷம் ஓர் ஓட்டத்தைப் பெற அழைத்தார். எனினும் அந்த ஓட்டத்தை எடுக்க மறுத்தமைக்காக டேரில் மிற்செல்லுக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்த விருதை வென்ற நான்காவது நியூசிலாந்து வீரர் என்ற பெருமையை மிற்செல் பெற்றுள்ளார். டானியல் விற்றோரி, பிரெண்டன் மெக்கலம் மற்றும் கேன் வில்லியம்சன் ஆகியோர் முன்னதாக இந்த விருதைப் பெற்றிருந்தனர். (ஐ)

# பாலியல் குற்றச்சாட்டில் பிரபல வீரர் கைதானார்



இங்கிலாந்தின் பிரபல உதைபந்தாட்ட வீரரான கிறீன்வூட் பாலியல் வன்புணர்வில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்செஸ்டர் யுனைற்றெட் அணிக்காக விளையாடி வரும் அவர், பெண் ஒருவரை பாலியல் வன்கொடுமை செய்து கொலை மிரட்டல் விடுத்தாரென்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார்.

கிறீன்வூட்டிற்கு எதிராக பாதிக்கப்பட்ட பெண், சமூக வலைதளங்களில் காணொலிகள் மற்றும் புகைப்படங்களை வெளியிட்ட நிலையில் காவல்துறை இந்த நடவடிக்கையை எடுத்தது.

மான்செஸ்டர் யுனைடெட் கால்பந்து கழகம் கிறீன்வூட்டை இடைநீக்கம் செய்துள்ளது. இதனிடையே மேலும் விசாரணை நடைபெற உள்ளநிலையில் கிறீன்வூட் தற்போது பிணையில் விடுவிக் கப்பட்டுள்ளார். (ஐ)



# சுரங்க லக்மால் ஓய்வு!

கொழும்பு, பெப். 04

இலங்கையின் வேகப்பந்து வீச்சாளர் சுரங்க லக்மால், இந்திய டெஸ்ட் சுற்றுப் பயணத்தை தொடர்ந்து சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

34 வயதான சுரங்க லக்மல் ஐந்து டெஸ்ட் போட்டிகளுக்கு தலைவராக இருந்து இலங்கை அணியை வழிநடத்தியும் உள்ளார். இலங்கை அணிக்காக 68 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள சுரங்க லக்மல் 168 விக்கெட்களை வீழ்த்தியுள்ளார். இதில், நான்கு தடவைகள் 5 விக்கெட்களை வீழ்த்தியுள்ளார்.

86 ஒருநாள் மற்றும் 11 இருபது - 20 சர்வதேச போட்டிகளில் விளையாடியுள்ள சுரங்க லக்மால் முறையே 109 மற்றும் 8 விக்கெட்களை வீழ்த்தியுள்ளார்.

அதேநேரம் அவர் டெஸ்டில் 928 ஓட்டங்களையும், ஒருநாள் போட்டிகளில் 244 ஓட்டங்களையும் எடுத்துள்ளார்.

ஓய்வு குறித்து அறிவித்த சுரங்க லக்மால், தாய்நாட்டை நம்புவதற்கும் மரியாதை செய்வதற்கும் எனக்கு வாய்ப்பளித்த இலங்கை கிரிக்கெட்டுக்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். அதேநேரம், எனது தொழில் வாழ்க்கைக்கும் எனது தனிப்பட்ட வளர்ச்சிக்கும் இலங்கை கிரிக்கெட் கணிசமான பங்களிப்பை செய்துள்ளது எனக் கூறியுள்ளார்.

2009 முதல் 2022 வரை இலங்கை அணியின் வெற்றிக்கு உறுதுணையாக இருக்கும் சுரங்க லக்மாலின் முடிவு குறித்து கருத்து தெரிவித்த கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆஷ்லி டி சில்வா, “அவரது பங்களிப்பு இலங்கை கிரிக்கெட்டுக்கு என்றும் மறக்க முடியாத நினைவாக அமையும்”என்றார். (ஐ)



# ஆஸி. புறப்பட்டது இலங்கை அணி!

கொழும்பு, பெப். 04

தசூன் சானக தலைமையிலான இலங்கை தேசிய கிரிக்கெட் அணி நேற்று அதிகாலை அவுஸ்திரேலியா புறப்பட்டது.

அவுஸ்திரேலியா புறப்பட்டுள்ள இலங்கை அணி ஐந்து போட்டிகள் கொண்ட சர்வதேச இருபது - 20 தொடரில் அவுஸ்திரேலிய அணியுடன் மோதவுள்ளது.

தொடரின் முதலாவது போட்டி சிட்னியில் பெப்ரவரி 11ஆம் திகதி ஆரம்பமாகும் என்பது குறிப்பிடத் தக்கது. (ஐ)

# ஜனவரியில் மட்டும் நடந்த விபத்துகளில் 250 பேர் பலி!

கொழும்பு, பெப். 04

இலங்கையில் விபத்து மரணங்கள் அதிகரித்து வரும் நிலையில் ஜனவரி மாதத்தில் மட்டும் இடம்பெற்ற விபத்து சம்பவங்களில் 250 பேர் பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு இடம்பெற்ற வாகன விபத்துகளில் 2,473 பேர் மரணித்ததுடன் 5,474 பேர் பலத்த காயமடைந்ததாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்றும் முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்துகளில் 11 பேர் மரணித்தனர்.

இதேவேளை, இந்த வருடம் ஜனவரி மாதத்தில் மாத்திரம் 1,875 வீதி விபத்துக்கள் பதிவாகியுள்ளதுடன் அவற்றில் 235 விபத்துக்களால் மரணங்கள் சம்பவித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த மாதத்தில் மாத்திரம் 250 பேர் வீதி விபத்துகளில் பலியாகியுள்ளதாக பொலிஸார் மேலும் கூறினர். இவற்றில் 39 ஓட்டோ விபத் துக்கள் பதிவாகியுள்ளதுடன் அவற்றில் 40 பேர் உயிரிழந்தனர். (அ)

# மரண அறிவித்தல்



தோற்றம்
01
-
04
-
1939

மறைவு
02
-
02
-
2022

## திருமதி
## மகாலிங்கம் செல்லப்பாக்கியம்

யாழ். கம்பர்மலையைப் பிறப்பிடமாகவும், மயிலியதனை, கொம்மந்தறை ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட மகாலிங்கம் செல்லப்பாக்கியம் அவர்கள் 02.02.2022 புதன்கிழமை அன்று அதிகாலை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கந்தையா - பாக்கியம் தம்பதியரின் ஏக புத்திரியும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும்,இரத்தினம் மகாலிங்கம் (சமாதான நீதிவான், முன்னாள் உபதலைவர், நகரசபை- வல்வெட்டித்துறை) அவர்களின் அன்பு மனைவியும்,பரந்தாமன்(லண்டன், முன்னாள் உதவி விரிவுரையாளர், விலங்கியல் பீடம் - யாழ் பல்கலைக்கழகம்), சுரேஷ்(லண்டன்), சுதாகரன்(தலைவர் - சுபரா நிறுவனம் லண்டன்), சுபத்திரா, சுமதி(ஆசிரியை - யா/சிதம்பரக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும்,சூரியகலா(லண்டன், முன்னாள் கணணி ஆலோசகர், L.B.N தொலைக்காட்சி நிலையம் - கொழும்பு), சுகந்தி(லண்டன்), துஷித்தா(கணக்காளர்- லண்டன்), சற்குணராசா(ஓய்வு பெற்ற வர்த்தக முகாமையாளர்- பருத்தித்துறை), விஜயகுமார்(பிரதி அதிபர்- யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும்,காலஞ்சென்ற பாலசிங்கம், தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும்,நடராசா(ஓய்வு பெற்ற வங்கி முகாமையாளர்), தவராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும், ரிஷி(லண்டன்), ஷாலினி(லண்டன்), ஜெயனி(லண்டன்), சுவரன் (லண்டன்), அருண்ராஜ்(லண்டன்), அருண்ஜா, பிறேமிகன்(எமிறல் ஹாட்வயர் உடுப்பிட்டி), சுகந்திகா(ஆசிரியை யாழ்/கம்பர்மலை வித்தியாலயம் கொம்மந்தறை), காலஞ்சென்ற இந்துஜா, இந்துஷன், கீர்த்தனா(லண்டன்), பார்த்தீபன்(இரண்டாம் நிலை கப்பல் கப்டன்), அருண்ஜா ஆகியோரின் பாசமிகு பேத்தியும்,கிருத்திவ்(லண்டன்), வினோஷென், ரித்திகா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னரின் இறுதிக்கிரியை 02-02-2022 புதன்கிழமை அன்று ந.ப:12:00 மணியளவில் மயிலியதனையில் அமைந்துள்ள அவரது மகளின் இல்லத்தில் நடைபெற்றுப் பின்னர் மயிலியதனை ஊரிக்காடு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**பரந்தாமன் (மகன்) - 00447718867567**
**சுபத்திரா (மகள்) - 0779128793**
**சுரேஷ் (மகன்) - 00447568571117**
**சுதாகரன் (மகன்) - 00447947471529**
**சற்குணராசா (மருமகன்) - 0740356714**
**சுமதி (மகள்) - 0770542908**
**விஜயகுமார் (மருமகன்) - 0740477369**

தகவல்:
**குடும்பத்தினர்.**






# தமிழருக்கு சுதந்திரத்தை வழங்க சிங்கள மக்கள் முன்வரவேண்டும்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கோரிக்கை

வவுனியா, பெப். 04

தமிழர்களுக்கு சுதந்திரத்தை வழங்குவதற்கு சிங்கள் மக்கள் முன்வரவேண்டும் என வவுனியாவில் கடந்த 1812 ஆவது நாளாக தொடர் போராட்டம் மேற்கொண்டுவரும் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. வவுனியாவில் நேற்று வியாழக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர்கள் இவ்வாறு குறிப் பிட்டனர்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர்கள்-

பயங்கரவாதச் சட்டத்தை நீக்குவதற்கு ஜி.எஸ்.பி பிளஸை ப் பயன்படுத்துமாறு ஐரோப்பிய ஒன்றியத்தை வலியுறுத்தி ஒரு கடிதம் அனுப்பியுள்ளோம். எமது பிள்ளைகள் இலங்கை இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டதற்கு தற்போதைய பயங்கரவாதச் சட்டமே பிரதான காரணமாகும்.

பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகளின் தாய்மார்களாகிய நாங்கள் பணத்தையோ இறப்புச் சான்றிதழையோ ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டோம் என்பதை நீதி அமைச்சரிடம் கூற விரும்புகிறோம். எங்களுக்கு பொறுப்புக்கூறல் மற்றும் நீதி வேண்டும். சர்வதேச குற்றவியல் நீதி மன்றம் மட்டுமே நீதி மற்றும் பொறுப்புக்கூறலை எமக்கு வழங்க முடியும்.

இதேவேளை, சிங்கள மக்களின் சுதந்திர தினத்தை நாம் எதிர்க்க விரும்பவில்லை. தமிழர்களுக்கு சுதந்திரத்தை வழங்குவதற்கு சிங்கள மக்கள் முன்வரவேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்.

ஒடுக்குமுறையில் இருந்து சுதந்திரத்தை அனுபவிக்கும் விடயத்தை அவர்கள் தமிழர்களுக்கும் வழங்கவேண்டும். காணாமல் ஆக்கப்பட்ட பிள் ளைகளும் தமது உறவுகளுடன் மகிழ்வுடன் வாழ்வதை அவர்கள் அங்கிகரிக்கவேண்டும்-என்றார். (அ)

# களனிதிஸ்ஸ மின்னுற்பத்தி நிலையத்தின் மின் பிறப்பாக்கிகள் மீண்டும் செயலிழப்பு

கொழும்பு, பெப். 04

தேசிய மின் கட்டமைப்பிற்கு 280 மெகாவாட் மின்சாரத்தை விநியோகிக்கும் களனிதிஸ்ஸ மின்னுற்பத்தி நிலையத்தில் உள்ள இரண்டு மின் பிறப்பாக்கிகளும், எரிபொருள் இன்மையால் நேற்றுமுன்தினம் இரவு முதல் செயலி ழந்துள்ளன.

குறித்த மின்னுற்பத்தி நிலையத்தின் ஒரு மின்பிறப்பாக்கியில் இருந்து 165 மெகா வொட் மின்சாரமும் மற்றுமொரு மின்பிறப்பாக்கியில் இருந்து 115 மெகாவாட் மின்சாரமும் தேசிய மின்கட்டமைப்புக்கு விநியோகிக்கப்படுகின்றது.

எரிபொருள் இன்மையால் செயலிழந்திருந்த சப்புகஸ்கந்த மற்றும் கொழும்பு துறைமுக மின்னுற்பத்தி நிலையங்களுக்கு அவசியமான எரிபொருளை தற்போது விநியோகிப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பராமரிப்புப் பணிகள் காரணமாக நிறுத்தப்பட்ட நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையத்தின் மின் பிறப்பாக்கி இயந்திரம் தற்போது தேசிய மின் கட்டமைப்புடன் முழுமையாக இணைக்கப்பட்டுள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி செயலிழந்த நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் மூன்றாவது மின் பிறப்பாக்கிச் சீர்செய்யப்பட்டு ஜனவரி மாதம் 31 தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை மீண்டும் பராமரிப்புப் பணிக்காக நிறுத்தப்பட்டது.

எனினும், இந்த மின் பிறப்பாக்கி நேற்று முன்தினம் மீண்டும் தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளதுடன், தற்போது 300 மெகாவாட் மின்சாரம் தேசிய மின் கட்டமைப்பில் இணைக்கப்பட்டுள்ளது. (அ)

# 460 பேர் பூரண குணம்

கொழும்பு, பெப். 04

கொரோனா வைரஸ் தொற்றுக்கு சிகிச்சை பெற்று வந்த மேலும் 460 பேர் பூரண குணமடைந்துள்ளனர் என தொற்று நோய் பிரிவு நேற்று அறிவித்துள்ளது.

இதன்படி, நாட்டில் தொற்றுக்கு உள்ளானவர்களில் 579,780 பேர் இதுவரை பூரணமாக குணமடைந்து வெளியேறினர். (அ)

# மின் கட்டணம் உயராது!

கொழும்பு, பெப். 04

மின்கட்டணத்தை அதிகரிப்பதற்கு எந்தவித எதிர்பார்ப்பும் இல்லை என்று மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்த அமைச்சர், யார் எதனை கூறியபோதிலும் தற்போதைய சூழ்நிலையில் மின் கட்டணம் அதிகரிக்கப்பட மாட்டதென குறிப்பிட்டார்.(அ)

# அடுத்த ஜனாதிபதியாகும் எண்ணம் எனக்கு இல்லை

## கூறுகிறார் சம்பிக்க ரணவக்க

கொழும்பு, பெப். 04

அடுத்த ஜனாதிபதியாகும் எண்ணம் தனக்கு இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் ரணவக்க, தற்போதைய நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதே எனது ஒரே நோக்கமாகும். தற்போது நாடு சீர்குலைந்துள்ளது. இது மக்களின் தவறல்ல.

பொதுமக்களுக்கு உரிய நேரத்தில் மருந்து கிடைப்பதில்லை, அத்தியாவசியப் பொருள்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. உரம் கையிருப்பு இல்லாமல் விவசாயிகள் தவிக்கின்றனர். எரிவாயு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு, மின்வெட்டு போன்றவையும் தொடர்ந்து விதிக்கப்படுகின்றன.

நிதி முறைகேடுகள் காரணமாகவே இந்த பிரச்னைகள் ஏற்பட்டுள்ளதால், நாட்டின் நிலைக்கு தற்போதைய ஆட்சியாளர்களே பொறுப்பேற்க வேண்டும். அமைதியான முயற்சிகள் மூலம் அரசுக்கு எதிராக மக்கள் நிற்கவேண்டும்.

ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள் வழக்குகளில் இருந்து விடுவிக்கப்படுவதால் தற்போதைய சட்ட முறைமையில் எனக்கு நம்பிக்கை இல்லை.

அரசாங்கத்துக்கு சவால் விடுக்கும் நபர்களை கைது செய்து சிறையில் அடைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன-என்றார். (அ)

## 12 வருடம்...

-இவ்வாறு ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 47 உறுப்பு நாடுகளிடம் சுட்டிக்காட்டியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்.

கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 47 உறுப்பு நாடுகளின் தூதரகங்களுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்திலேயே அவர் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

2009ஆம் ஆண்டு மே மாதம் இலங்கையில் ஆயுதம் தாங்கிய இன மோதல் முடிவுற்ற ஒரு வாரத்தினுள் 2009 மே 23 ஆம் திகதி ஐ.நா. செயலாளர் நாயகத்தின் இலங்கைக்கான விஜயத்தின் முடிவில் இலங்கை அரசாங்கத்தினாலும் ஐக்கிய நாடுகளினாலும் ஏனைய பல விடயங்களோடுகூடவே பின்வருமாறு கூறும் ஒரு கூட்டறிக்கை விடுக்கப்பட்டது.

'சர்வதேச மனித உரிமைகள் நியமங்களுக்கும் இலங்கையின் சர்வதேச கடப்பாடுகளுக்கும் அமைவாக, மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்குமான தனது வலுவான கடப்பாட்டை இலங்கை மீளவலியுறுத்தியது. சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டத்தின் மீறல்களை கையாள்வதற்கான ஒரு பொறுப்புக்கூறல் நடைமுறையின் முக்கியத்துவத்தை செயலாளர் நாயகம் கோடிட்டுக் காட்டினார். அப்பிரச்சினைகளைக் கையாண்டு தீர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்".

மேற்காணும் கடப்பாடுகளை கையாண்டுத் தீர்ப்பதற்கு எதுவித காத்திரபூர்வமான நடவடிக்கைகளையும் இலங்கை கடந்த பன்னிரெண்டு (12) வருடங்களில் மேற்கொள்ளவில்லை. இதற்கு இடைப்பட்ட காலத்தில் ஐ.நா மனித உரிமைகள் பேரவை 2021 மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட 46/1 தீர்மானத்தோடு, ஏழு (7) தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது.

இதனிடையே இலங்கை பெருமளவுக்கு அமுல்படுத்தப்படாத பல்வேறு கடப்பாட்டு அறிக்கைகளை விடுத்துள்ளது. பொறுப்புக் கூறல் விடயத்தைக் கையாண்டு தீர்க்காதுவிட்டதற்கு மேலதிகமாக, இலங்கை அரசாங்கமானது, இராணுவமயப்படுத்தல், சிவில் சமூக மற்றும் ஊடகத் துறையினர் மற்றும், குடும்ப உறுப்பினர்கள் அத்துடன், தமது உயிரிழந்த உறவுகளை நினைவுகூறும் ஏனையவர்கள் ஆகியோரைப் புதிதாகக் கைது செய்வதோடு கூடவே அரசியல் கைதிகளை காலவரையறையற்று தடுத்து வைத்திருத்தல், பல்வேறு அரசாங்க திணைக்களங்களின் செயல்பாடுகள் மூலமாக இடம்பெயர்ந்த தமிழ் மக்களை அவர்தம் காணிகளில் மீளக் குடியேற விடாது தடுத்தல், பாரம்பரிய கூட்டு காணி உரிமைகளையும் கால்நடைகளின் மேய்ச்சல் உரிமைகளையும் மறுத்தல் அரசியல் மற்றும் சிவில் சமூக செயற்பாடுகளை கண்காணித்தலை தீவிரப்படுத்தல் ஆகியன அடங்கலாக இலங்கைத் தமிழர்களை அடக்கி ஒடுக்கும் ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

தமிழ் மக்களை அவர்தம் பாரம்பரிய வாழ்விடங்களிலிருந்து விரட்டியடிப்பதற்கு மேலதிகமாக, தொல்லியல் அகழ்வாரய்ச்சிகள், வன விலங்கு பாதுகாப்பு மற்றும் வனப் பாதுகாப்பு எனும் போர்வையில் தற்போது நடைபெற்று வரும் காணிச் சூறையாடல்தான் தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற மிகவும் பாரதூரமான ஆபத்தாகும்.

இலங்கை அரசாங்கத்தின் இச் செயற்பாடுகள், தமிழ் மக்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களை தமது வரலாற்று ரீதியான வாழ்விடப் பிரதேசங்களாகக் கொண்டு, ஐக்கிய பிரிபடாத இலங்கையினுள் வாழ்ந்துவரும் ஒரு மக்கள் குழுமத்தினர் என்று உள்நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எண்ணக்கருவை தோற்கடித்து அதன்மூலம் வடக்கு, கிழக்கு மாகாணங்களை ஒரு சிங்கள பெரும்பான்மையின பிரதேசங்களாக முனைப்புடன் மாற்றியமைக்கும் எண்ணம் கொண்டவையாகும்.

46/1 ஆம் இலக்க தீர்மானம் தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் கடப்பாடுகள் தொடர்பாக அதன் செயலாற்றுகையை மதிப்பிடுமுகமாக ஐ.நா மனித உரிமைகள் பேரவை 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் கூடுகின்றபோது, மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கான தனது கடப்பாடுகளில் இலங்கை அரசாங்கம் தவறிவிட்டதென்பதையும் அந்த மீறல்கள் மீண்டும் நிகழாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கான ஒரே உறுதியான வழியாக தமிழ் தேசியப் பிரச்னையைக் கையாண்டு தீர்ப்பதற்கு அது எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என்பதையும் தெளிவாக எடுத்துரைக்குமாறு உறுப்பு நாடுகளை நான் வலியுறுத்துகிறேன்.- என்றுள்ளது. (அ-02)

## இலங்கை...

உப செயலாளர் இரதீஸ்வரன் சபிதா உள்ளிட்டவர்கள் இந்த அழைப்பை விடுத்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த வேலன் சுவாமிகள் -

பெப்ரவரி 4 ஆம் நாள் இலங்கை யின் சுதந்திர தினத்தை முழுமையாக பகிஷ்கரித்து அது தமிழர் தேசத்தின் கரிநாள் என்ற அடிப்படையில் தமிழர்களாக சுயர்நிர்ணயத்திற்காக போராடி வருகின்ற மக்களாக எதிர்ப்புக்களை வெளிப்படுத்தி வருகின்றோம். இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முள்ளிவாய்க் கால் முற்றத்தில் அனைத்து தமிழ் உறவு களும் ஒன்றுகூடி தமிழர் தேசத்தின் கரிநாள் என்ற தொனிப்பொருளில் எங்கள் உணர்வு களையும் உரிமைக்கான குரலினையும் எடுத்துக்காட்டவேண்டும்.

வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கம் தலைமையேற்று போராட்டத்தை நடத்த இருக்கின்றார்கள்.

எந்த இடத்தில் எங்கள் இன அழிப்பு நடைபெற்றதோ, எந்த இடத்தில் கொத்துக்கொத்தாக மக்கள் உயிரிழந்தார்களோ எந்த இடத்தில் எங்கள் போராட்டம் மௌனிக்கப்பட்டதோ அந்த இடத்தில் இருந்து நாங்கள் மீண்டும் எழுவோம். முள்ளிவாய்க்கால் மண் எங்கள் இனத்தின் பரிகார நீதிக்கான ஆரம்ப இடமாக அமைந்துள்ளது. எங்கள் உறவுகளை நாங்கள் கையளித்தோம். அதற்கு என்ன நடந்தது என்று இதுவரை தெரியவில்லை. நீதி கேட்டு எங்கள் தாய்மார்கள் நீண்ட காலமாக போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றார்கள். இன்று முள்ளிவாய்க்கால் முற்றம் தொடங்கி வட்டுவாகல் பாலம் ஊடாக முல்லைத்தீவு நகர் வரை பேரணி இடம்பெறும் - என்றார். (அ)

## யாழ். கரையோர...

னர். அத்துடன், தொடர்ச்சியாக பெரும் சொத்து இழப்புக்களை மீனவர்கள் எதிர்கொண்டு வருகின்றனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த 31ஆம் திகதி பருத்தித்துறை சுப்பர்மடம் மீனவர்கள் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

வீதிகளை மறித்தும், கடலுக்கு செல்லாதும் நடத்தப்படும் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு கோரிய நிலையில் வடமராட்சியின் கரையோரப் பகுதி முழுவதும் நேற்று நான்காவது நாளாகவும் போராட்டம் தொடர்ந்தது.

இந்த நிலையில், நேற்று மாதகல் கரையோப் பகுதியின் வீதிகள் முற்றாக முடக்கப்பட்டன. வீதியின் குறுக்கே படகுகளை நிறுத்தியும், பந்தல்களை அமைத்தும் போராட்டம் ஆரம்பமானது.

வடமராட்சி தொடக்கம் பொன்னாலை கரையோரப் பகுதி வரையிலும், யாழ்ப்பாணம் மாநகர பகுதியிலும் நேற்றுப் போராட்டங்கள் இடம்பெற்றன. (ஐ-2-3)

## அமைச்சரின்...

கடலில் மரணமான இரு மீனவர்களின் மரணத்துக்கு நீதி கேட்டும், இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கண்டித்தும் வடமராட்சி - பருத்தித்துறை - சுப்பர் மடத்தில் மீனவர்கள் பெரும் போராட்டத்தை நடத்தி வந்தனர். கடந்த நான்கு நாட்களாக நடைபெற்ற போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவர எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்த நிலையில், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று போராட்ட பந்தலுக்கு சென்று மீனவர்களுடன் பேச்சு நடத்த முயன்றார்.

மீனவர்களின் கேள்விகளுக்கு எழுத்து மூலம் உறுதி வழங்க மறுத்த அவர் வாய் மூல உறுதியை நம்புமாறு கோரினார். ஆனால், அவரை நோக்கி மீனவர்கள் பல கேள்விகளை எழுப்பவே அவர் ஆவேசமானார். இதைத் தொடர்ந்து அவர் அங்கிருந்து வெளியேறினார். இதன்போது அவரை வெளியேறுமாறு கோஷம் எழுப்பிய மீனவர்கள் அவரைப் பின் தொடர்ந்து சென்றும் உரத்துக் குரல் எழுப்பியிருந்தனர். (ஐ-2-3)

## மீனவர்கள்...

களின் மரணத்துக்கு நீதி கோரியும் வடமராட்சி மீனவர்கள் பருத்தித்துறை சுப்பர்மடத்தில் போராட்டங்களை ஆரம்பித்தனர். வீதியில் பந்தல் அமைத்தும் கடலுக்கு செல்லாமலும் கடந்த நான்கு நாட்களாக இடம்பெற்று வந்தது.

இந்த நிலையில், நேற்று பருத்தித்துறை பொலிஸார் இந்தப் போராட்டத்துக்கு தடை கோரி விண்ணப்பம் செய்து உத்தரவைப் பெற்றனர். இதையடுத்து, போராட்ட இடத்துக்கு சென்ற பொலிஸார் தடை கட்டளையைவாசித்துக் காட்டி போராட்டக்காரர்களை அங்கிருந்து செல்லுமாறு கூறினர்.

இதற்கு மீனவர்கள் மறுத்த நிலையில், அந்தப் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. இதனல், விசேட அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டனர். இதன் பின்னர், போராட்ட பந்தலும் அங்கிருந்து அகற்றப்பட்டது.

இது மீனவர்கள் மத்தியில் கோபத்தை ஏற்படுத்தியமையால் அங்கு பதற்ற நிலைமை காணப்பட்டது. (ஐ-2-3)

## பயங்கரவாத...

வர் கி.சேயோன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் சுகிர்தன் ஆகியோர் கலந்து கொண்டு கையெழுத்து போராட்டத்தை அரம்பித்து வைத்தனர்.

இது குறித்து சுமந்திரன் எம்.பி. தெரிவிக்கையில்-

இலங்கையில் பயங்கரவாத தடுப்புச் சட்டம் மிகமோச மான சட்டமாக இருக்கின்றது. 6 மாத காலத்துக்கு தற்காலிக சட்டமாக கொண்டுவரப்பட்டது. 42 ஆண்டுகளாக இருக்கின்றது. விசேடமாக தமிழ் இளைஞர்களை நசுக்கி- ஒடுக்கி ஆள்கின்ற சட்டமாக சர்வதேச விழுமியங்கள் எல்லாவற்றையும் புறந்தள்ளிச் செயல்படும் சட்டமாக அது இருக்கின்றது.

அது நீக்கப்படும் என்று இலங்கை அரசு தெளிவாக சர்வதேச சமூகத்துக்கு வாக்குறுதி கொடுத்துள்ளது. அவ்வாறு நீக்குவதற்கான முயற்சியும் சென்ற அரசாங்க காலத்தில் இடம்பெற்றுள் ளது. அது முழுமை பெறவில்லை. ஆனால், தற்போது பயங்கரவாத தடைச்சட்டத்தை சீர்திருத்துகின்றோம் என்று சொல்லி எந்த வித உப்புச்சப்பில்லாத ஒரு சீர்திருத்தமாக அறிவிக்கப்படு கின்ற ஒரு வர்த்தமானி பிரசுரம் வந்துள்ளது.

அது நடைமுறையில் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் அமுலில் எந்த மாற்றத்தையும் செய்யப் போவதில்லை. ஆகவே சர்வதேசத்தை ஏமாற்றுவதற்கு விசேடமாக ஐரோப்பிய ஒன்றியத்தை ஏமாற்றுவதற்கும் எதிர்வரும் 28 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக் கூட்டத்தொடர் ஆரம்பமாக இருக்கின்றது. அவர்களையும் ஏமாற்றலாம் என்ற எண்ணத்தில் இது செய்யப்படுகின்றது. அவர்கள் எல்லாருக்கும் விளக்கமாக விடயங்களை அறிவித்துள்ளோம் - என்றார். (அ-2)

## திருத்தம்...

பதிலளிக்கும் முகமாக இலங்கையின் மனித உரிமைகள் குறித்து ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் எதிர்வரும் மார்ச் 3ஆம் நாள் விவாதிக்கப்படவுள்ளது.

இந்நிலையில், "ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் மற்றுமோர் அமர்வுக்கு முன்னதாக, இலங்கை அதன் தோல்வியுற்ற மனித உரிமைகள் பதிவுகளிலிருந்து கவனத்தைத் திரும்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. அரசாங்கம் தனது குறைந்தபட்ச முன்னேற்றங்களை காட்டுதவற்குத் துடிக்கின்றது", என்று சர்வதேச நீதிபதிகள் ஆணைக்குழுவின் சட்ட மற்றும் கொள்கை பணிப்பாளர் இயன் சீடர்மன் தெரிவித்தார்.

"இந்த நேர்மையற்ற சீர்திருத்த முயற்சிகளால் பெரும் குறைபாடுள்ள - கொடிய பயங்கரவாத தடைச் சட்டத்தை திருத்த முடியாது. ஆனால், அது முற்றிலும் ரத்துச் செய்யப்பட வேண்டும். இந்தச் சட்ட்டம் இலங்கைக்குள் அல்லது வெளியே தனிநபர், தனிநபர் குழு, சங்கம் அல்லது அமைப்புக்களின் சுதந்திரத்தை - தன்னிச்சை செயலை காலவரையறையின்றி பறிக்க அனுமதியளிக்கிறது.

"முன்மொழியப்பட்ட திருத்தங்களின் பிரகாரம், கைது செய்யப்பட்டு விசாரணைகளின்றி தடுத்து வைத்திருக்கும் காலம் 18 மாதங்களிலிருந்து 12 மாதங்களாக குறைப்பதன் மூலம் இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்துள்ளதாக அரசாங்கம் கூறுகிறது. 12 மாதங்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவர் பிணை பெறுவதற்கு தகுதி உடையவர் என்பதை பிரிவு 2இன் ஷரத்து 10 குறிப்பிடுகிறது.

"இந்தத் திருத்தங்கள் எந்த வகையிலும் அடிப்படை மீறலை நிவர்த்தி செய்யவில்லை. ஏனெனில், அவை நீதிமன்றத்தின் முன் விசாரணைக்கு வாய்ப்பளிக்கப்படாமல் ஒரு வருடம் முழுவதும் சுதந்திரத்தை தடுத்து வைக்க அனுமதி அளிக்கப்படுகின்றது. பயங்கரவாத தடைச் சட்டத்தின் பிரிவு 16ஐ கையாள்வதில் திருத்தங்கள் தோல்வியுற்றுள்ளன. இது சாதாரண சான்றுகளின் விதிகளுக்கு நேரடியாக முரணாக உள்ளது. சந்தேகநபர்களின் கைதில் நீதித்துறை மேற்பார்வை பற்றாக் குறை காணப்படுகின்றது. இலங்கை பயங் கரவாதத் தடைச் சட்டம் போன்றவற்றை கைவிட்டு அதற்குப் பதிலாக சட்டத்தின் ஆட்சிக்கு இணங்கும் - குற்றவியல் நடைமுறைகள் மூலம் பயங்கராதத்துக்கு தீர்வு காண வேண்டும்", என்றும் அவர் கூறினார். (ஐ)

## மீனவர்கள் இன்று...

களத்தில் பதற்றநிலை ஏற்பட்டது. இந்த நிலையில், இன்றைய தினம் கடலில் கறுப்புக் கொடி போராட்டத்தை நடத்தவுள்ளதாக மீனவர்கள் அறிவித்துள்ளனர். (ஐ - 2- 3)

## சுதந்திரம்...

கின்ற நாளில் இருந்து 75ஆவது ஆண்டுக்குள் இந்த நாடு காலடி எடுத்து வைக்கிறது. 74 ஆவது ஆண்டு நிறைவு கொண்டாட்டங்கள்தலைநகரிலும்வேறு பல இடங்களிலும் ஒழுங்கு செய்யப்பட் டுள்ளன.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில், மேற்கு ஆட்சியாளர்களிடமிருந்து இலங்கைக்கு கொடுத்ததாக சொல்லப்படுகின்ற சுதந்திரம் எங்களுக்குக் கிடைக்கவில்லை. இதனால்தான் காலத்துக்குக் காலம் நாங்கள் இந்த ஆட்சிமுறை மாற்றியமைக்கப்பட வேண்டும், அரச அதிகாரங்கள் அனைத்து மக்களுக்கும் சமமாக பங்கிடப்பட வேண்டும். அதற்கான ஒழுங்குமுறைகள் செய்யப்பட வேண்டும். சமஷ்டி முறையிலான ஓர் ஆட்சியிலேதான் அது செய்யப்பட முடியும் என்று வலியுறுத்தி வருகின்றோம்.

75ஆவது சுதந்திர வருடத்துக்குள் இலங்கை காலடி எடுத்து வைக்கிறது என்று சொல்லப்படுகின்ற அதே தினத்தில் எங்களுக்கு இந்த சுதந்திரத்திலே எந்தப் பங்கும் இல்லை. தொடர்ச்சியாக எங்கள் சுதந்திரம், உரிமைகள் ஒன்றன்பின் ஒன்றாக பறிக்கப்பட்டுதான் வந்திருக்கின்றன. எங்களுடைய நிலங்கள் மிக மேசமான - துரிதமான முறையில் பறிக்கப்படுகின்றன - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# சட்டத்தை அமுல்படுத்துமாறு வலியுறுத்தும் போராட்டம் இது

## சுப்பர்மடத்தில் கூறினார் சுமந்திரன்

யாழ்ப்பாணம், பெப். 04

மீனவர்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டமானது சட்டத்தை அமுல்படுத்துமாறு கோரும் போராட்டம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கை கடல் எல்லைக்குள் இந்திய இழுவை படகுகளின் அத்துமீறல்களுக்கு நிரந்தரமான தீர்வு மற்றும் வடமராட்சி கிழக்கு கடலில் இடம்பெற்ற மீனவர்கள் உயிரிழப்புக்கு நீதி ஆகியவற்றை கோரி ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் 4ஆவது நாளாக நேற்றும் முழு வீச்சுடன் இடம்பெற்றது.

இந்தநிலையில் நேற்று பருத்தித்துறை-சுப்பர்மடம் பகுதியில் போராட்டத்தை முன்னெடுத்துள்ள மீனவர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ சுமந்திரனும், இரா.சாணக்கியனும் சந்தித்து ஆதரவு தெரிவித்தனர்.

இதன்போது மீனவர்கள் மத்தியில் கருத்து வெளியிடும்போதே பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மீனவர்களினால் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டமானது சட்டத்தை அமுல்படுத்துமாறு கோரும் போராட்டம். இது சட்டவிரோதமான போராட்டம் இல்லை.

அத்துடன், மீனவர்களின் போராட்டத்துக்கு எங்களது ஆதரவு எப்போதும் உள்ளது-என்றார். (அ-02)





கிளிநொச்சி வட்டக்கச்சி மத்திய கல்லூரியின் மாணவர் தலைவர்களுக்கு சின்னஞ்சூட்டும் நிகழ்வுசிரேஷ்ட மாணவ தலைவி மோ. அகவிழி தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றபோது பாடசாலை அதிபர் இரவீந்திரநாதன் விருந்தினராக பங்கேற்று மாணவர்களுக்கு சின்னங்களை சூட்டி வைத்தார்.

# நெருக்கடி வலுத்தமையால் பதவி துறந்தார் அருந்திக்க!

கொழும்பு, பெப். 04

தாம் வகிக்கும் இராஜாங்க அமைச்சர் பதவியை இராஜினாமா செய்துள்ளார் என அருந் திக்க பெர்னாண்டோ அறிவித் துள்ளார்.

மருத்துவ பீட மாணவர்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர் பில் இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னான்டோ வின் மகன் கைது செய்யப்பட்டார்.

அத்துடன், அமைச்சருக் குரிய வாகனம் மற்றும் அதிகாரி ஒருவரும் இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்டுள்ளனர்.

இவ்வாறானதொரு பின் புலத்திலேயே சுயாதீன விசாரணைக்கு இடமளிக் கும் வகையில் பதவி விலகியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இராஜாங்க அமைச்சர் பதவியை விலகுமாறு ஜனாதிபதியும் அருந்திக்க பெர்ணான்டோவுக்கு பணிப் புரை விடுத்திருந்தார் என தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

## மரண அறிவித்தல்

பிறப்பு 27 - 10 - 1952



இறப்பு 01 - 02 - 2022

### திருமதி மேரி ஜொய்ஸ் இருதயதாஸ்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto வை வசிப்பிடமாகவும் கொண்ட மேரி ஜொய்ஸ் இருதயதாஸ் அவர்கள் 01.02.2022 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அன்ரனி (சட்டத்தரணி), எட்வீஸ் அன்ரனி தம்பதியரின் அன்பு மகளும்,இருதயதாஸ் எமிலியானஸ்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், பிரயான், பிருந்தா ஆகியோரின் அன்புத் தாயாரும், நிஷா, ரமணன் ஆகியோரின் அன்பு மாமியாரும், மேரி ஆன், காலஞ்சென்ற லூடிக்கன்ஸ், அருட்கலாநிதி ஸ்ரனி அன்ரனி (O.M.I), அருள்தாசன், நிர்மலா ஆகியோரின் அன்புச் சகோதரியும்,ஜோசவ், றேமண்ட், பேணடேற் ஆகியோரின் அன்பு மைத்துனியும்,ரொஷானி, சுபா, நீலன், டினேஷ், ஜெப்றி ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும், ஜெனிபர், ஸ்ரேவன் ஆகியோரின் மாமியாரும், டான்டே, றைலன், இலாய், ஸ்கைலன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

பார்வைக்கு :
Friday, 04 Feb 2022 6:00 PM - 9:00 PM
Saturday, 05 Feb 2022 8:00 AM - 9:30 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

திருப்பலி :
Saturday, 05 Feb 2022 10:00 AM
St. Thomas the Apostle Roman Catholic Church 14 Highgate Drive, Markham, ON L3R 3R6, Canada

நல்லடக்கம் :
Saturday, 05 Feb 2022 11:30 AM
Holy Cross Catholic Cemetery & Funeral Home 8361 Yonge St, Thornhill, ON L3T 2C7, Canada

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
பிரயான் - மகன்
Mobile : +14163582757

தகவல்:
குடும்பத்தினர்










## மரண அறிவித்தல்

பிறப்பு 07 - 12 - 1938



இறப்பு 31 - 01 - 2022

### திருமதி அருளானந்தம் செல்வநாயகியம்மா (தங்ககிளி)

யாழ். வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto வை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட அருளானந்தம் செல்வநாயகியம்மா அவர்கள் 31.01.2022 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ராசா, தங்கத்திரவியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கனகசபை, அன்னம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கனகசபை அருளானந்தம் (பண்டத்தரிப்பு வடலியடைப்பு) அவர்களின் அன்பு மனைவியும், யோகநாதன் (கனடா), புவனேஸ்வரராஜா (பிரான்ஸ்), மகேந்திரராஜா (பிரான்ஸ்), விஜயலட்சுமி (பிரான்ஸ்), தயாளினி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான நவரத்தினம், சித்திவிநாயகம், பரமகுரு மற்றும் தெட்சணாமூர்த்தி (கிளி- இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரியும்,சுதா(கனடா), கமலா(பிரான்ஸ்), தனுஷா(பிரான்ஸ்), வரதராஜா(பிரான்ஸ்), சிவனேசன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், தர்ஷனா, நர்மதா, சஞ்ஜீவன், புவனேகா, டிலுக்ஷன், அரவிந்தன், ஸ்ரீராம், துஷாந்தி, பிரகீஸ், நிலவன், தூயவன், பார்கவி, சோபி, மதுஷா, நிந்துஷா, விக்னேஷ், விதுர்ஷிகா ஆகியோரின் அன்பு பேத்தியும் ஆவார்.

பார்வைக்கு :
Saturday, 05 Feb 2022 6:00 PM - 9:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

கிரியை :
Sunday, 06 Feb 2022 9:00 AM - 11:00 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

தகனம் :
Sunday, 06 Feb 2022 11:30 AM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
யோகன் - மகன்
Mobile : +14164176933

தகவல்:
குடும்பத்தினர்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.02.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்கள்
7.05 மணி : உளவியல் கருத்து-உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கச்சேரி ஆரம்பம்-மறுஒளிபரப்பு

**பகல்**
12:00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-பா.பாண்டி,தம்பி திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : Short Film
6.00 மணி : ஹோலிவூட் சுப்பர்-10




**இரவு**
7.00 மணி : ரசிகன் என்கின்ற தலைவன்- நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டி டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகசோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: ஜெபங்கேளும் திருகோணமலை நிகழ்ச்சி
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : அன்பியம் சனி மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (யாழ்ப்பாணம்)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (யாழ்ப்பாணம்)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்